# The Bible Standard

## (தமிழ் வெளியீடு)



"உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.
அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

**"LIFT UP A STANDARD
FOR THE PEOPLE"
Isaiah 62 : 10**

Translated from
BS#902 Sep-Oct 2017
Published on Oct 13, 2017

பொருளடக்கம்

அன்பை தற்பரிசோதனை செய்யும் ஓர் செயல்முறை ......... 2

ஒழுக்கப்பயிற்சிகள், போதனைகள் அனுபவங்கள் ......... 11

தெய்வீக ஜீவிகளின் பரலோக ஸ்தானத்தை புரிந்துகொள்ள... ......... 18

BS Tamil Version - 43

2017

# அன்பை தற்பரிசோதனை செய்யும் ஓர் செயல்முறை

A Practical Self-Examination on love

**"நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள். உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள்" (2 கொரி. 13:5).**

மனுக்குலமானது முயற்சித்திருப்பதுபோல முயற்சி செய்தால், அன்பை விவரிக்கவே முடியாததாகக் காணப்படுகிறது. நம்முடைய புரிந்து கொள்ளுதலுக்காக சில பொதுவான ஆலோசனைகளை நாம் சிந்திக்கலாம்: **(a)** ஒரு நபர் அல்லது பொருள் மீது தீவிரமான நேசம், பாசம், விருப்பம், மற்றும் மரியாதையான உணர்வு கொண்டிருத்தல். **(b)** மற்றொருவருக்காக, பிரத்தியேகமாக பாலுணர்வு கவர்ச்சியின் அடிப்படையில் கருதும்போது ஏற்படுகிற ஆழ்ந்த மென்மையான உணர்ச்சி பொங்கும் நேசம். **(c)** மனமகிழ்ச்சியுடன் தனிப்பட்ட பாசப் பிணைப்பு அல்லது ஆழ்ந்த நேச உணர்வு. **(d)** தேவனிடம் மனுஷன் கொண்டிருக்கிற முழு ஈடுபாடுள்ள பயபக்தியான மனப்பான்மை. **(e)** மனிதரிடம் தேவன் கொண்டிருக்கும் பிரதிபலன் கருதாமல் நன்மை செய்ய விருப்பமுள்ள மனப்பான்மை. **(f)** குடும்ப உறவு அல்லது நெருங்கிய நட்பிலிருந்து எழுகிறதான மற்றொருவர்மீது கொண்டுள்ள பலமான நேச உணர்வும், அக்கறையும் ஆகும். ஆயினும் தேவனிடம் நாம் கொண்டிருக்கும் நமது நிலையை சிந்தித்துப்பார்க்க விரும்பும் போது, இந்த விளக்கங்கள் குறைவுள்ளவைகளாகவே காணப்படுகின்றன. நாம் ஏன் அவரை நேசிக்க வேண்டும் அல்லது நாம் அவரை நேசிக்கிறோமா? என்று கேட்க வேண்டும். அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்பு கூருகிறோம்! நம்முடைய பாட தலைப்பு வாக்கியமானது, **"உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்"** என்று நம்மிடம் கேட்டுக் கொள்கிறது – செதுக்குதல்கள், மெருகேற்றுதல்கள், கிளைநறுக்குதல்கள், ஒழுக்கப் பயிற்சிகள், சிட்சைகள் ஆகியவற்றிற்கான ஆதாரங்களுக்காக உங்களுடைய தற்போதைய நிலைமைகளை உங்களுடைய கடந்த காலத்துடன் ஒப்பிட்டுப் பாருங்கள். நான் விசுவாசத்தில் இருக்கிறேனா? என்று நம்மை நாமே கேட்க வேண்டும். ஓ, தேவனுடைய மதிப்பீட்டில் அவர்மீதும், அவருடைய சகோதரர்கள், அவருடைய காரியம், என்னுடைய சத்துருக்கள் மீதும் கூட, நான் கொண்டுள்ள, எனது அன்பின் மூலமாக நான் ஏதோ ஒன்று அல்லது ஒன்றுமில்லை என்பது அளவிடப்பட வேண்டியதாயிருக்கிறது. ஆம் என்னுடைய அறிவைவிடப் பெரியது என்னுடைய அன்பு.

**உங்களை நீங்களே பரீட்சித்துப்பாருங்கள்**

**உங்கள் விசுவாசத்தைப் பரீட்சித்துப்பாருங்கள்**

**உங்கள் நோக்கங்களைப் பரீட்சித்துப்பாருங்கள்**

அன்பை விவரிக்க முடியாதா? இந்த அற்புதமான பண்பு இல்லாத எதுவும், தேவனுடைய பார்வையில் பிரியமாயிராது! அப்போஸ்தலன் அன்பை வரையறுத்து விளக்கிக் கூற முயற்சிக்கவில்லை, ஆனால் அதன் வெளிப்படுத்துதல்கள் சிலவற்றை நமக்குக் கொடுப்பதுடன் தன்னில்தானே திருப்தியடைகிறார். அப்படிப்பட்ட குணாம்சங்களுள்ள அன்பைக் கொண்டிருப்பவர்கள் மட்டுமே அதன் மதிப்புணரக் கூடியவர்களாயிருக்கிறார்கள், ஆனால் மற்றபடி அதனை விளக்கிக்கூற இயலாதவர்களாய் இருக்கிறார்கள். உண்மை என்னவெனில், அன்பை, ஜீவன் மற்றும் வெளிச்சத்தைப்போல வரையறுத்து விளக்கிக் கூறுவது கடினமானது; மேலும் அதனைப் புரிந்து கொள்ள எடுக்கும் நமது சிறந்த முயற்சிகள் யாவும் அதன் பலன்களின் போக்கிலேயே இருக்கின்றன. இது தேவனாலுண்டாயிருக்கிறது; இது இருதயத்திலும், நாவிலும், கைகளிலும், எண்ணங்களிலும் இருப்பதும் – மனுஷீக குணப்பண்புகளையெல்லாம் கண்காணித்து அவற்றைக் கட்டுப்படுத்த நாடுகிறதுமான தேவசாயலாகும். அன்பு குறைவுபடுகிற இடத்திலுள்ள பலன்கள் ஏறக்குறைய தீமையாயிருக்கும்; அன்பு இருக்குமிடத்திலுள்ள பலன்கள் அன்பின் அளவுக்கு ஏற்றபடி வேறுபடுவதுடன் அந்த விகிதத்திற்கேற்ப நன்மையானதாயிருக்கும்.

கிறிஸ்தவனில் உள்ள இனிய இயல்பு, சாந்தம், தயவு, பொறுமை போன்றவைகளின் வெளிப்படையான வெளிப்பாடு, தேவனுடைய பார்வையிலும் அல்லது, அவனுடைய பார்வையிலும் போதுமானதல்ல, இந்த கிருபைகள் அவனுடைய சொந்த இருதயத்திற்குள் அன்பின் ஆவி நிரம்பி, பெருகுவதால் தான் உருவாக்கப்பட வேண்டும். அநேக ஆவியின் கிருபைகளானது சீர் திருந்தாதவர்களாலும்கூட ஏற்றுக் கொள்ளப்பட்டு, நற்குடிப்பிறப்பின் குறியீடுகளாக போலியாகப் பின்பற்றப்படுகின்றன. மேலும் அநேக காரியங்களில் இருதயங்களையும், உணர்வுகளையும் மூடுகிற மேலங்கி அல்லது முக மூடியாக

**COURTESY BY :**
THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Leon Snyder. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*

வெற்றிகரமாக அணியப்பட்டு , அன்பின் பரிசுத்த ஆவிக்கு முற்றிலும் எதிரானதாயிருக்கின்றன.

தேவ அன்பை நாம் மதிப்புணர்ந்து பாராட்டும் அளவே, நம்முடைய குணாதிசயங்களை தெய்வீக மாதிரிக்கு ஒத்திருக்கச் செய்வதில் நம்முடைய வைராக்கியத்தின் அளவாயிருக்கிறது, இயல்பாகவே பண்படாத, அருவருப்பான, சீர்கேடடைந்த மனோபாவம் இருப்பதினால், தெய்வீக அன்பின் கிருபை இருதயத்திற்குள் பிரவேசித்த பின்பு, வெளிப்படையாக மனுஷனுடைய எண்ணங்கள், வார்த்தைகள் மற்றும் செயல்களில் எல்லாம் அந்த கிருபை வெளிப்படுவதற்கு முன்பாக ஒரு நீண்ட காலப்பகுதி தேவைப்படுகிறது. இதற்கு மாறாக, மற்றவர்களோ, அதிக உயர்குடிப் பிறப்பும் நாகரீக நயமுள்ள பயிற்சியும் பெற்றவர்களாக, தங்களுக்குள் தேவனுடைய கிருபை இல்லாமலேயே, வெளித்தோற்றத்தில் உயர்ந்த பண்புகளைக் கொண்டிருப்பார்கள். இருதயத்தை அறியத்தக்க தகுதிவாய்ந்தவர் அவர் மாத்திரமே அல்லாமல், வேறொருவருமில்லை. எனவே இந்த கிருபையை யார் பெற்றிருக்கிறார்கள், யார் பெற்றுக் கொள்ளவில்லை என்பதையும், அவர்களுடைய இருதயங்களில் அதன் வளர்ச்சியின் அளவையும் நிதானிக்க வேண்டியதும் அவரே; ஆனால் ஒவ்வொருவரும் தனக்காகவும் நிதானிக்கலாம், மேலும் ஒவ்வொருவரும் இருதயத்திற்கு இதமான உற்சாகமூட்டும் ஊக்கமும் அருளுகிற பரிசுத்த ஆவியாகிய அன்புடன், அதன் வெளிச்சத்தை தன்னுடைய உடன் சிருஷ்டிகளுடன் தொடர்பு கொள்ளக்கூடிய வழிகள் எல்லாவற்றினூடாக மிகவும் பிரகாசிக்கச்செய்து, தனது பரமபிதாவை மகிமைப் படுத்தவும், "**உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்கும்**" (1 பேது. 2:9) முயற்சி செய்ய வேண்டும்.

பிரதிஷ்டை செய்த பரிசுத்தவான்களுக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிற, மகிமையான நம்பிக்கையினால் தூண்டப்பட்ட ஒரு இருதயத்திலிருந்து அப்போஸ்தலன் பேதுருவின் உணர்ச்சியூட்டப்பட்ட, சொல்திறனுள்ள வாழ்த்துக்கள் பாய்ந்தோடுகிறது. அவருடைய நிருபத்தின் ஒவ்வொரு வரியும் புத்திமதியால் நிறைந்திருக்கிறது. ஆதி அப்போஸ்தலர் காலத்தின் "வரங்களில்" தீர்க்கதரிசனம் அல்லது சொற்பொழிவு உயர்வாக புகழப்பட்ட ஒன்றாக இருந்தது. தேவனுடைய இரகசியங்களைப் பற்றிய அறிவும்கூட உயர்வாக புகழப்பட்டது. அத்துடன் கிறிஸ்தவனுக்குரிய அத்தியாவசிய தேவைகளின் மத்தியில் பெரிய விசுவாசமே பிரதானமானதாக எண்ணப்பட்டது; இருந்தபோதிலும் இவைகளையெல்லாம் முழுமையான அளவில், தான் பெற்றிருந்தாலும், அன்பு இல்லாதிருந்தால், தான் ஒன்றுமில்லை – பூஜ்ஜியம் – புது சிருஷ்டியின் அங்கத்தினராகவும் இருக்க முடியாது என்று அப்போஸ்தலன் அறிவிக்கிறார், ஏனெனில் புதிய சுபாவத்திற்கு, அன்பே ஜெனிப்பிக்கிற ஆவியாயிருக்கிறது.

எப்படிப்பட்ட அதிசயமான பரீட்சையாக இது இருக்கிறது! அப். பவுல், "**நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள். உங்களை நீங்களே பரீட்சித்துப்பாருங்கள்**" என்று ஆலோ சனை கூறுகிறார். நாம் ஒவ்வொருவரும் நம்மை நாமே பரீட்சித்துப் பார்ப்போமாக. தேவனுடைய மதிப்பீட்டில் நான் ஏதோ ஒன்று அல்லது ஒன்றுமில்லை என்பது என்னுடைய அறிவு அல்லது புகழ் அல்லது பேச்சுத்திறமை ஆகிய வற்றைவிட அவருக்காகவும், அவருடைய சகோதரர்களுக்காகவும், அவருடைய காரியத்திற்காகவும், பொதுவான உலகத்தாருக்காகவும், என்னுடைய விரோதிகளுக்காகவும்கூட நான் கொண்டுள்ள என் அன்பினாலேயே அளவிடப் படவிருக்கிறது.

இப்போதும், ஒருவர் தேவனுடைய ஆழமான இரகசியங்களைப் பற்றிய அறிவை, அன்பின் பரிசுத்த ஆவியால் ஜெனிப்பிக்கப்படாமலேயே பெற்றிருக்க முடியும் என்பதாக நாம் புரிந்து கொள்ளக் கூடாது; ஏனெனில் தேவனுடைய ஆவியில்லாமல் எந்த மனுஷனும் தேவனுக்குரிய ஆழமான காரியங்களை அறிய முடியாது; ஆனால் ஒருவர் (சிலர் அப்படி செய்கிறார்கள்) ஆவியின் மூலம் பெற்ற அறிவை இழந்து விடுவதற்கு முன்பாகவே அந்த ஆவியை இழந்து விடக்கூடும். எனவே குணாம்சத்தின் அளவில், நாம் அன்பை முதலாவது வைக்க வேண்டும், அதனை கர்த்தருடன் நாம் நெருங்கியிருப்பதற்கும், அவருடன் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதற்கும் உரிய பிரதான பரீட்சையாகக் கருத வேண்டும்.




## அன்பே மெய்யான நற்பண்பின் இரகசியம்

அன்பின் முக்கியத்துவம் பற்றி இப்படிப்பட்டதொரு எண்ணத்தை நமக்கு கொடுத்ததோடு, அது எப்படிப்பட்டது என்றும், எப்படிப்பட்டது இல்லை என்றும் – எவ்வாறு அது செயல்படுகிறது, எவ்வாறு அது செயல்படவில்லை அல்லது நடந்து கொள்ளவில்லை என்றும் விளக்கிக்கூற அப்போஸ்தலன் முன்வருகிறார். நாம் இந்த காரியத்தை செயல் முறையில் பயன்படுத்துவதைப் பற்றி அவரிடமே கேட்டு தெரிந்து கொள்ளலாம். நான் பிரத்தியேகமாக விசுவாச வீட்டாருக்காக குறிப்பிடத்தக்க அளவு பாடுபடவும், நீண்டகாலத்திற்கு அப்படியாக பாடுபட நேர்ந்தாலும் தயவுடன் நடந்து கொள்ள வழிநடத்தும் அப்படிப்பட்டதொரு அன்பை பெற்றிருக்கிறேனா? நல்ல நோக்கங்களுக்கான ஏதாவது ஆதாரம் கொடுக்கிறவர்களுடைய பலவீனங்களையும் ஆபூரணங்களையும் குறித்து நான் பொறுமையாயிருக்கிறேனா? பாதையிலிருந்து விலகிச் செல்பவர்கள் காரியத்திலுங்கூட மகா பெரிய எதிராளியானவன் திரளான ஜனங்களின் மனங்களை குருடாக்கி வைத்திருப்பதை உணர்ந்து, இந்த அன்பின் வெளிப்பாடு நம்முடைய

கர்த்தராகிய இயேசுவில் மிகவும் பிரதானமாக இருந்ததையும், அவர் தம்முடைய எதிராளிகளிடமும் பொறுமையோடிருந்தார் என்பதையும் நினைவுகூர்ந்து அவர்களிடம் நான் பொறுமையாயிருக்கிறேனா?

நம்முடைய பாட தலைப்பு வசனம், நம்மைநாமே சோதித்தறிய வேண்டுமென்று மட்டும் கேட்கவில்லை, ஆனால் பிரதிஷ்டை செய்திருப்பவர்களை – உங்களை நீங்களே பரீட்சித்துப் நிரூபியுங்கள் என்றும் அறிவுரை கூறுகிறது! எனவே நான் என்னுடைய வழிமுறைகளில் தயவோடிருந்து, ஜீவியத்தின் ஒவ்வொரு காரியத்திலும் அவைகள் அதிகமாக சம்பந்தப்பட்டிருப்பதை அறிந்து, என்னுடைய நடத்தையையும், என்னுடைய தொனியையும் காத்துக்கொள்ள முயற்சி செய்கிறேனா? இந்த அன்பின் அடையாளத்தை என்னுடைய செயல்களிலும் வார்த்தைகளிலும் எண்ணங்களிலும் ஊடுருவிப் பரவச் செய்திருக்கிறேனா? நான் மற்றவர்களைப்பற்றி நினைக்கிறவனாக, நலங்கருதுகிறவனாக இருக்கிறேனா? அவர்களிடமாக வார்த்தையிலும், பார்வையிலும், செயலிலும் தயவோடிருப்பதை உணர்ந்து, வெளிப்படுத்துகிறேனா? என்று கேட்க வேண்டும். ஒரு கிறிஸ்தவன் மற்றெல்லாருக்கும் மேலாக, தயவோடும் மரியாதையோடும், நற்பண்போடும் வீட்டிலும், அவன் வேலை செய்யும் இடத்திலும், சபையிலும் – எவ்விடத்திலும் நடந்து கொள்ள வேண்டும். பூரண அன்பை அடைந்திருப்பதற்க்குத்தக்கதாக, இருதயத்தின் தொடர்ச்சியான உறுதியான முயற்சியானது, பொறுமையினாலும், தயவினாலும் முழுவதுமாய் நிறைந்து அவர்களைத் தூண்டுகிற அந்த எண்ணத்தைப்போல ஒவ்வொரு வார்த்தையையும், செயலையும் பெற்றுக் கொள்வதற்காக இருக்கும். தேவனுடைய பிள்ளையைப் பொறுத்தமட்டில், இந்த பண்புகள் வெறும் வெளித்தோற்றமான அலங்காரமாயிருப்பதில்லை, அவைகளால் இருக்கவும் முடியாது அதற்கு மாறாக, அவைகள் ஆவியின் கனிகளாயிருக்கின்றன. – தேவனுடன் ஐக்கியத்துக்குள்ளாக வந்து, அவரிடத்தில் கற்றுக் கொண்டு, அவருடைய அன்பின் பரிசுத்தமான ஆவியினால் பெற்றுக் கொண்ட வளர்ச்சிகளும், அதனால் ஏற்பட்ட பலன்களுமாயிருக்கின்றன.

என்னுடைய காரியங்கள் அவ்வளவாய் முன்னேற்றமடையாதிருக்கும் வேளையிலும்கூட மற்றவர்கள் அவர்களுடைய செழிப்பில் மென்மேலும் முன்னேற்றமடைவதை நான் கண்டு சந்தோஷமடையத்தக்கதாக பரந்த மனப்பான்மையுள்ள அந்த அன்பை – “பொறாமையில்லாத” அந்த அன்பை நான் உடையவனாயிருக்கிறேனா? இதுவே உண்மையான பரந்த மனப்பான்மை, இது துன்மார்க்கமான சுபாவத்திலிருந்து ஊற்றெடுக்கிற எரிச்சல் மற்றும் பொறாமைக்கு நேர் எதிரானது. பொறாமைக்கு சுயநலமே வேராயிருக்கிறது; பொறாமை அன்பாகிய வேரின் மீது வளராது. அன்பானது ஒவ்வொரு நல்வார்த்தையிலும் செயலிலும் முன்னேற்றமடைவதிலும், கிறிஸ்தவ கிருபையில் அபிவிருத்தியடைவதிலும், தெய்வீக நீதியின் ஆவியால் தூண்டப்படுகிறதான எல்லோருடைய தேவ ஊழியத்திலும் சந்தோஷப்படுகிறவர்களுடன் சேர்ந்து சந்தோஷப்படுகிறது.

“**அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது**” என்ற அந்த தாழ்மையான அன்பு என்னிடத்தில் இருக்கிறதா? தன்னடக்கத்தை காத்துப் பேணுவதும், தற்பொழிவை நாடாததும், தன்னை உயர்த்தாததுமான அன்பு இருக்கிறதா? நற்கிரியைகளைத் தூண்டுகிறதும், மனுஷர் காணாதபடியும், தேவனைத் தவிர வேறு எவரும் காணாமலும், அறியாமலும் இருந்தாலும் அந்த காரியத்தை செய்கிறதும், தன்னுடைய அறிவையும், தன்னுடைய கிருபைகளையும் குறித்து மேன்மை பாராட்டாததும், நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும், பிதாவினிடத்திலிருந்தே வருகின்றது என்பதை தாழ்மையுடன் ஏற்றுக் கொள்கிற அந்த அன்பை நான் பெற்றிருக்கிறேனா? மேலும் ஒவ்வொரு இரக்கத்துக்காகவும் அன்பினால், ஊழியஞ் செய்வதினால் நான் அவருக்கு கைமாறு செய்கிறேனா? தற்பெருமையினால் மேன்மை பாராட்டுவது, அநேக மனுஷரை மதிகேட்டுக்குள்ளாகமட்டுமல்லாது, சில சமயங்களில் அவனுடைய மேன்மை பாராட்டுதல்களை நிறைவேற்றும் அவனுடைய தீவிர முயற்சியில் மிகப்பெரிய பாவங்களுக்குள்ளாகவும் நடத்திச் சென்றிருக்கிறது. கர்த்தருடைய ஆவி தெளிந்த புத்தியுள்ள ஆவியாயிருக்கிறது. அது மற்றவர்களை பரந்த மனப்பான்மையுடன் மதிக்க நாடுவது மட்டுமல்லாமல், தெளிந்த புத்தியுடன் தன்னை மதிப்பிடுவதோடு தன்னுடைய குணாம்சத்தையும், முயற்சியினால் அடைந்தவைகளையும் பற்றி மிக உயர்வாக எண்ணாதிருக்கும். “**நீங்கள் பணஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்.**” (எபி. 13:5).

நற்பண்புகளுள்ளதும், “**அயோக்கியமானதை செய்யாததுமாக**” இருக்கிற அன்பை நான் பெற்றிருக்கிறேனா? பெருமை என்ற வேரிலிருந்து அயோக்கியமான நடத்தை, மரியாதையற்ற தன்மை அதிகமாக வளர்கிறது; இது தங்களை புத்திக்கூர்மையிலோ அல்லது பணம் சம்பந்தமானவற்றிலோ முக்கியமானவர்களாக நினைக்கிறவர்கள் எல்லாருக்கும் உரியதாயிருக்கிறது. மரியாதை காட்டும் பண்பு என்பது அற்பமானவைகளிலும் அன்புடனிருத்தல் என்று விவரிக்கப்படுகிறது; நற்பண்பு என்பது, அற்பமான காரியங்களிலும் அன்பு காட்டுதலாகும். மரியாதை காட்டும் பண்பின் இரகசியம் மேற்புற மெருகூட்டல் அல்லது இருதயத்தில் அன்பாக இருக்கும். கிறிஸ்தவர்களான நாம் இருதயப் பூர்வமான அன்பைப் பெற்றிருக்க வேண்டும். விசுவாச குடும்பத்தாரிடத்தில் மட்டுமல்ல, நம்முடைய வீடுகளிலும், உலகத்தாருடனான நம்முடைய நடவடிக்கைகளிலும்கூட அது தயவும் நற்பண்புமுள்ள கிரியைகளுக்கு நம்மைத் தூண்டுவதாயிருக்கும்; நீதி. 16:18, “**அழிவுக்கு முன்னானது அகந்தை: விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை**” என்று மிகத் தெளிவாகக் கூறுகிறது.

தன்னலமற்றதும், தனது நலன்களை மட்டுமே – “**தற்பொழிவை நாடாததும்**” தனக்குரிய உரிமைகளில் சிலவற்றையும் கூட மற்றவர்களுடைய நலன்களுக்காக முழுமனதுடன் தியாகம் செய்யவும் துணிகிற அன்பு என்னிடம் இருக்கிறதா? அல்லது அதற்கு மாறாக, எனக்குரிய உரிமைகளையே ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும்

உரிமையுடன் கோருவது மட்டுமல்லாமல், மற்றவருடைய வசதிகளையும், சௌகரியங்களையும், உரிமைகளையும் பொருட்படுத்தாமல் அந்த உரிமைகளை வற்புறுத்தி கேட்கிற சுயநலம் என்னிடம் இருக்கிறதா! இந்த குறிப்பிட்ட வகையிலான அன்பை உடையவனாக இருப்பது என்பது மற்றவர்களிடமிருந்து அநியாயமாக எந்த நன்மையையும் எடுத்துக் கொள்வதற்கு எதிராக நாம் ஜாக்கிரதையுடனிருப்பதும், அத்துடன் தீங்கு செய்வதற்குப் பதிலாக தீங்கனுபவிப்பதையும்; அநியாயம் செய்வதற்குப் பதிலாக அநியாயத்தை சகிப்பதையும் தெரிந்து கொள்ளுவதை அர்த்தப்படுத்துகிறது.




## அன்பு வீட்டில் துவங்குகிறது

யாவருக்கும் நன்மை செய்யத்தக்கதாக இயற்கையின் ஒழுங்கின்படியான உறவு பிணைப்புகளால் தன்னைச் சார்ந்திருக்கிறவர்களை எல்லா வகையிலும் அக்கறையுடன் கவனித்துக் கொள்வதையும், அவர்களுடைய தேவைகளைச் சந்திப்பதையும், ஒருவன் புறக்கணிக்க முடியாது என்று தேவனுடைய வார்த்தை மிகவும் தெளிவாகக் கூறுகிறது. ஒவ்வொரு அர்த்தத்திலும், "அன்பு வீட்டில்தான் துவங்குகிறது." நாம் தெரிந்து கொண்டபடி, பூரணமான அன்பின் ஆவியை உடைமையாகப் பெற்றிருக்கும் ஆண்களும், பெண்களும், வாழ்க்கையின் எந்த காரியத்திலும், தங்களுடைய நலன்களை மட்டுமே சிந்தித்துக் கொண்டிருக்க மாட்டார்கள் என்பதே சரியான எண்ணமாயிருக்கிறது. உறுதியான தேவபக்தியுள்ள ஒரு கணவன், தன்னுடைய துணைவியின் கனிவான, மனதுக்குகந்த (மனரம்மியமான) அர்ப்பணிப்புள்ள கண்களுக்குள்ளாகப் பார்க்கும்போது, இன்னதென்று தெரியாத மன எழுச்சிகள் செயல்பாட்டிற்கு தூண்டப்படுகின்றன. அன்பின் இந்த கூறு பயிற்சி செய்யப்படும்போது, வாழ்க்கையின் எல்லா காரியங்கள் மீதும், வீட்டிற்கும், குடும்பத்திற்கும் உள்ளேயும், அதைப் போலவே வெளியேயும் மிகப் பெரிய செல்வாக்கைப் பெற்றிருக்கும். "**ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும், விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்.**" (1 தீமோ. 5:8).

நல்ல மனநிலையிலிருக்கிறதும் "**எளிதில் சினமடையாததுமான**" அன்பை – கேள்வியின் இரண்டு பக்கங்களையும் நான் காணும்படி செய்கிறதும், தெளிந்த புத்தியுள்ள ஆவியைக் கொடுக்கிறதும் அதனால் மிகுந்த, எரிச்சலும் மூர்க்கத்தனமான கோபமும் தகுதியற்றதாக மட்டுமல்லாமல், அதைக் காட்டிலும் மோசமானதாகவும், அதற்கு இலக்கானவர்களுக்கு ஆபத்தானதாகவும், என்னுடைய இருதயம் மற்றும் சரீரத்தின் மீது அதன் விளைவால் ஆபத்தை உண்டாக்குவதாகவும்கூட இருக்கும் என்பதை நான் உணர்ந்து கொள்ளும்படி செய்கிற அந்த அன்பை நான் பெற்றிருக்கிறேனா? பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளைகள் என்ற வகையில் நாம், "**அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச் செய்வேன், ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்**" (சங். 91:15) என்கிற தேவனுடைய அழைப்பைக் கேட்கிற சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். நீதியின் தேவன், வாழ்க்கையின் கடுந்துயரங்களிலிருந்து கசப்பை எப்படி இரகசியமாக நீக்குவது என்று அறிந்திருக்கிறார். பூமிக்குரிய காரியங்கள் எல்லாம் மாயையாக இருப்பதை ஆத்துமாவின் வாஞ்சைகளை திருப்திப்படுத்தவோ, அல்லது காயப்பட்ட ஆவிக்கு ஆறுதல் அளிக்கவோ முற்றிலும் அவைகள் கூடாததாயிருப்பதையும் நமக்கு அனுபவத்தினால் காட்டுவதின் மூலமாக தேவன் இதைச் செய்கிறார். நாம் மனப்பூர்வமாக தேவனுடைய அன்புள்ள தயவை ஏற்றுக் கொண்டால் அவர் நம்மில் நீதியாகிய சமாதான பலன்களை உருவாக்கி, நம்மில் பலமானதும், பெருந்தன்மையானதுமான குணாம்சங்களை, இச்சையடக்கம், விசுவாசப்பற்று, விசுவாச உண்மைத்துவம், தேவனிடத்தில் நம்பிக்கையாயிருத்தல் ஆகியவைகள் மூலமாக ஒழுங்குபடுத்தி வளரச்செய்வார்.

அன்பானது உறுதியாகவும், பெரும்பாலும் கண்டிப்பாகவும் வளைந்து கொடுக்காமலும் இருக்க வேண்டிய நேரங்களும் உண்டு. அது கோட்பாடுகள் மற்றும் மனதில் ஆழமாகப் பதியவைக்கப்பட வேண்டிய விலையேறப்பெற்ற பாடங்கள் சம்பந்தமானவையாகும். மேலும் இது கோபம் என்ற தலைப்பின்கீழ் வருகிறது. அந்த வார்த்தையை சரியான விதத்தில், நீதியான கோப உணர்ச்சி சம்பந்தமாக, அன்பின் நோக்கத்தைப் பயிற்சி செய்வதற்காகவும், நன்மை செய்வதற்காகவும் பயன்படுத்த வேண்டும். ஆனால் அது ஒரு முறை மட்டுமே பயிற்சி செய்யப்பட வேண்டும். நியாயமான கோபம் எனில், நாம் நம்முடைய உதடுகளிலோ, அல்லது நம்முடைய இருதயங்களிலோ பாவஞ்செய்யாத படிக்கு, பார்த்துக் கொள்ள வேண்டும். அதில் எந்த சமயத்திலும், நம்முடைய எதிரிகளாயிருப்பவர்களுக்கு நேராகவோ அல்லது நாம் உதவி செய்கிற அல்லது அறிவுரை கூறுகிற நம்முடைய நண்பர்களுக்கு நேராகவோ அன்புள்ளதும், பரந்த மனப்பான்மையுள்ளதுமான உணர்வுகளைத் தவிர வேறு எதையும் சிந்திக்கக்கூடாது.

எளிதில் எரிச்சலடைவது என்பது கெட்ட மனநிலை, எரிந்து விழுந்தன்மை (முன்கோபம்) பொல்லாங்கு செய்ய தீவிரிப்பது ஆகியவைகளைக் கொண்டிருப்பதாகும். இது அன்பின் ஆவிக்கு முழுமையாக முரண்பட்டதாயிருக்கிறது; மேலும் யாரெல்லாம் கர்த்தருடைய பக்கத்திலிருந்து, அவரைப் பிரியப்படுத்தவும், ஜெயங்கொள்ளுகிறவனுடைய

ஸ்தானத்தை அடையவும் நாடுகிறார்களோ அவர்கள் தற்காலத்தில் பொதுவான நடத்தையாயிருக்கும் இதற்கு எதிராக வைராக்கியத்துடன் தன்னைத் தற்காத்துக் கொள்ள வேண்டும். எந்த அளவுக்கு இந்த மனோபாவம் வளர்ச்சி யடைந்திருக்கிறதோ அல்லது மனவிருப்பத்துடன் பாது–காக்கப்பட்டிருக்கிறதோ அல்லது எதிர்த்து போராடப் படாதிருக்கிறதோ, அந்த அளவுக்கு இது, நம்முடைய பிதாவின் பரிசுத்தாவியில் நம்முடைய வளர்ச்சியின் குறைபாட்டுக்கும் அபூரணத்திற்கும், நம்முடைய மாதிரியான நமது கர்த்தராகிய இயேசுவுடைய சாயல் நம்மிடம் குறைவுபட்டிருப்பதற்கும் அத்தாட்சியாகிவிடுகிறது.

தீமையான ஆவியின் மிகச் சில அத்தாட்சிகள் மட்டுமே இந்த ஒன்றைப் போல (முன்கோபம்) தொடர்ச்சியாக இருப்பதற்காக ஒருவனிடத்திலிருந்து அதிகமான தயவை–யும், அதிகமான சாக்குப்போக்குகளையும் பெற்றுக் கொள்கின்றன. ஆனால் எவ்வாறாக இருப்பினும், அதிக மாக இயற்கையாய் அமைந்த ஒழுக்கச் சீர்கேடு, பரம்பரையாய் வருகிற குணப்பண்பு, நரம்பியல் கோளாறு–கள், இந்த சிடுசிடுப்பும், எளிதில் பேசிப்பழகாததும், முன்கோபமும் உள்ள ஆவியை நோக்கி சாய்கின்றன. கர்த்தருடைய ஆவியால் நிரப்பப்பட்ட ஒவ்வொரு இருதயமும், தன்னுடைய மாம்சத்திலுள்ள தீமையான இந்த மனோ பாவத்தை எதிர்ப்பதோடு அதற்கு எதிராக நல்ல போராட்டத்தைப் போராட வேண்டும்.

“இதுதான் என்னுடைய வழி” என்று சொல்லும்படி அது இருக்காது, ஏனெனில் விழுந்து போன இயல்பின் எல்லா “வழிகளும்” தீயவையே; மேலும் இதிலுள்ள பழைய சுபாவத்தையும், அதைப்போல மாம்சம் மற்றும் தீமையான வைகளின் மற்ற வேலைகளையும் ஜெயங்கொள்ள வேண்டியது புதிய மனம், இருதயம் மற்றும் சித்தத்தின் வேலையாயிருக்கிறது. ஒரு சில வழிகளில் நம்முடைய நண்பர்களுக்கும், வீட்டாருக்கும், இதற்கும் மேலாக அன்பு என்னும் கிருபையின் வல்லமை இதில் இருப்பதை நாம் காண்பிக்க முடியும். இந்த கிருபை வளரவளர, தேவனுடைய ஒவ்வொரு பிள்ளையையும் இனிமையான மனநிலை உள்ளவர்களாக அது மாற்ற வேண்டும். நம்மை அந்த–காரத்தினின்று அவருடைய ஆச்சரியமான ஒளிக்கு அழைத்தவரின் புண்ணியங்களை, அனுதின ஜீவிய காரியங்களில் அன்பின் ஆவியை வெளிப்படுத்திக் காட்டுவதின் மூலமாக அல்லாமல் வேறெந்த வழியிலும் நாம் சிறப்பாக காண்பிக்க முடியாது.

## அன்பு தீங்கு நினையாது

“**தீங்கு நினையாததும்,**” கபடமில்லாததும், தீமையைப் பற்றி சந்தேகம் கொள்ளாததும் அல்லது மற்றவர்களின் குற்றங்களைத் தேடி கண்டுபிடிக்க முயற்சி செய்யாததும், தீமையான நோக்கங்களைத் தனது இயல்பான பண்பாகக் கொண்டிராததுமான அன்பின் ஆவி என்னிடம் இருக் கிறதா? மற்றவர்களுடைய நடத்தையை எப்போதும் அன்பிரக்கத்துடன் விவரிக்கிறதும், இருதயத்தின் நோக்கங் களைப் பழித்துப் பேசுவதற்கு மாறாக, நியாயஞ் செய்வதில் தவறுகளைப் பொறுத்தமட்டில் கூடுமான சலுகைகளுக் கெல்லாம் வழி செய்யவும், எப்போதும் நாடுகிறதுமான அந்த அன்பை நான் பெற்றிருக்கிறேனா? பூரணமான அன்பு தன்னிலே நல்ல குறிக்கோள் கொண்டதாயிருக்கிறது. இதே நோக்கு நிலையிலிருந்து மற்றவர்களுடைய வார்த்தைகள் மற்றும் நடத்தையைப் பார்ப்பதற்கான முயற்சிகளை முடிந்த வரைக்கும் இது தேர்ந்தெடுக்க விரும்புகிறது. இது கொடிய பகைமைகளையும், சந்தேகங்களையும் பொக்கிஷமாக சேர்த்து வைக்கவில்லை. அற்பமான காரியங்களிலிருந்து தீய உள் நோக்கமுடைய சூழ்நிலையைச் சார்ந்த ஆதாரங் களின் சங்கிலித் தொடரை உருவாக்கவுமில்லை. “அன்பு குறைந்த இடத்தில் குற்றங்கள் பெரிதாகத் தெரிகின்றன” என்பது மிகவும் ஞானமுள்ள பழமொழியாகும்.




சில சமயங்களில், குற்றங்களை அன்பு கடந்து சென்றுவிடுவதுடன், அவற்றைப் பற்றி எதுவும் எண்ணாமலும், மன வெறுப்பு கொள்ளாமலும் விட்டுவிடும் சந்தர்ப்பங்களும் உண்டு. ஆனால் இதற்கு அன்பானது தன்னுடைய நண்பர்களை எப்படி நடத்துகிறதோ தீமை செய்கிறவர்களையும் முற்றிலும் அதே முறையில் தான் நடத்தும் என்று அர்த்தமல்ல. குற்றங்களைப்பற்றி கொஞ்சம் கவனமாயிருப்பது சரியானதும் அல்லது அவசியமானதும்கூட; அதுவும் முன்பு போல வெளிப் படையாக நெருக்கத்தைக் காட்டாத அளவில்தான் இருக்க வேண்டும். ஆனால் கனிவையும், தயவையும் தவிர எந்த வெறுப்பையும் வெளியரங்கமாகக் காட்டக்கூடாது – கூடிய விரைவில் முழுமையான ஒப்புரவாகுதலுக்கான வாய்ப்பின் கதவை திறந்தே வைத்திருக்க வேண்டும். ஒப்புரவாகுதலை ஊக்கப்படுத்தவும், தவறை மன்னிக்கவும், மறந்து விடவும் ஒரு மனப்பூர்வமான விருப்பத்தைக் குறித்துக் காட்டவும் செய்யக்கூடிய எல்லாவற்றையும் செய்ய வேண்டும்.

## அன்பு அநியாயத்தில் சந்தோஷப்படாது

**அநியாயத்தில் சந்தோஷப்படாமல்**

**அன்பு**

**சத்தியத்தில் சந்தோஷப்படும்.**

**1 கொரிந்தியர் 13:6**

“**அநியாயத்தில் சந்தோஷப்படாமல்**” மாறாக சத்தியத்தில் சந்தோஷப்படுகிற உண்மையான அன்பு என்னிடம் இருக்கிறதா? நியாயமானதுடன் முழுமையாக ஒத்திசை விலும், அநியாயமானதுடன் இசைவில்லாமல் விலகி இருக்கும்படியாக, நியாயம் மற்றும் அநியாயத்தின் கோட்பாடுகள் என் மனதில் உறுதியாக நிலைநிறுத்தப் பட்டிருக்கிறதா? அதனால் தீமைகளோடு போராடும் இடங்களிலெல்லாம் அவற்றால் நான் துயரமடையவும், அத்துடன் தீமைக்குள் விழுகிறவர்கள் அல்லது சோதனை

களால் சூழப்பட்டிருக்கிறவர்கள் எல்லாரையும் பற்றி அனுதாபப்படுறேனா? நான் நியாயத்தோடும், சத்தியத்தோடும் இணங்கியிருப்பதற்குத்தக்கதாக அநியாயத்தை எதிர்க்கிறேனா? ஒரு விஷயத்தைப் பற்றி அறியும் முன்னரே உருவாக்கிக் கொண்ட எனது கருத்துக்களை தலைகீழாக மாற்றுவதாயிருந்தாலும் அல்லது பூமிக்குரிய எனது சில நலன்களுக்கு பாதகமாக இருந்தாலும் சத்தியத்திலும் அதின் செழிப்பான வளர்ச்சியிலும் சந்தோஷப்படுவதை தவிர்க்க முடியாதவனாய் இருக்கிறேனா?

அப்போஸ்தலன் இங்கே கர்த்தருடைய ஜனங்களின் ஆவி என விவரிக்கிற தேவனுடைய அன்பு, சுயநலங்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட அன்பாயிருக்கிறது, அது நிலையான கோட்பாடுகள் மீது அஸ்திபாராம் போடப்பட்டிருக்கிறது. அவை நாளுக்கு நாள் மிகத் தெளிவாக, அதிகமாக பகுத்தறியப்பட்டு எப்போதும் எந்த விலை கொடுத்தாவது உறுதியாகக் கைக்கொள்ளப்பட வேண்டும். இது பிரதிஷ்டை செய்த பிள்ளை, சத்தியத்தில் – ஒவ்வொரு பாடத்தின் மீதான சத்தியத்தில், விசேஷமாக தெய்வீக வெளிப்பாட்டின் சத்தியத்தில், எவ்வளவுதான் அந்த சத்தியம் பிரசித்தி பெறாததாயிருந்தாலும் கூட; அதை ஆதரித்து பேசுவதில் எப்படிப்பட்ட அதிகமான பாடுகள் சம்பந்தப்பட்டிருந்தாலும்; இவ்வுலகம் மற்றும் இந்த பொல்லாத உலகத்தின் தேவனானவனால் குருடாக்கப்பட்டவர்களின் சிநேகம் இழப்பு ஆகியவற்றில் எவ்வளவு அதிகமாக விலை கொடுக்க நேர்ந்தாலும், அவற்றில் சந்தோஷமாயிருப்பதால், மிகுதியாக அது அவனுக்கு மிகவும் நன்மையாகவே இருக்கும். அன்பின் ஆவி சத்தியத்திற்காக அப்படிப்பட்ட நேசத்தை கொண்டிருக்கும். அதன்படி, நஷ்டம், பாடுகள், துயரம் அல்லது சத்தியம் அல்லது அதன் ஊழியக்காரர்களுக்கு எதிராக வருவது எதுவாக இருப்பினும் அதில் பங்குகொள்வதில் இது சந்தோஷமாயிருக்கிறது.

"***சகலத்தையும் தாங்கும்***" அன்பு என்னிடம் இருக்கிறதா? தீமையின் மூர்க்கமான எதிர்பாராத தாக்குதல்களின் வலிமையால் வெற்றி கொள்ள முடியாத அன்பு என்னிடத்திலிருக்கிறதா? தீமை, அசுத்தம், பாவம் மற்றும் அன்புக்கு எதிரான எல்லாவற்றையும் எதிர்க்கிற அன்பு என்னிடத்தில் உண்டா? தேவனுடைய காரியத்தினிமித்தமாக, நிந்தைகள், கண்டனங்கள், அவமானங்கள், நஷ்டங்கள் தவறான எண்ணங்கள் மரணத்தையும்கூட மனப்பூர்வமாக சகிக்கக் கூடிய திராணி இரண்டும் உள்ள அன்பு என்னிடத்திலிருக்கிறதா? "**நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்**" – இந்த விசுவாசத்தின் ஜீவனும், மையமுமாயிருப்பது, கர்த்தருக்காகவும், மற்றும் அவருடையவர்களுக்காகவும், உலகத்தாருக்காகவும்கூட அனுதாபத்துடன் கொண்டுள்ள அன்பின் பரிசுத்த ஆவியாயிருக்கிறது. எல்லா சூழ்நிலைகளின் கீழாகவும் பூரணமான அன்பானது தாங்கிக் கொள்ள முடியும். மேலும் தேவனுடைய கிருபையினால் நம்மை ஜெயங்கொள்ளுகிறவர்களாகும் நிலைக்கு கொண்டு வந்து சேர்க்கும், "**நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங் கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே.**" (1 யோவா.5:4; ரோம. 8:37).

## நீதிமானுடைய சந்தோஷம்

இந்த சமயத்தில் நம்முடைய அன்பின் பாடத்திற்குள்ளாக இரண்டாவது துணை கிருபையான சந்தோஷத்தை கொண்டுவர நாங்கள் விரும்புகிறோம். E.14, பக்கம். 291–ல் ரஸல் போதகர், பன்னிரண்டு பிரதான கிருபைகள் எல்லாவற்றின் மேலும், பிரத்தியேமாக, மிக முக்கியமான கிருபையான "அன்பின்" மீதும் சகோதரர்களை செயல்படும்படியாக எப்படி நடத்தினார் என்பது பற்றியும், ஜாண்சன் போதகர் எப்படி அந்த பன்னிரண்டு பிரதான கிருபைகள் மீதும், பிரத்தியேகமாக இரண்டாவது பிரதான கிருபையான சந்தோஷத்தின் மீதும் சகோதரர்களை செயல்படும்படியாக நடத்தினார் என்பது பற்றியும் சில கருத்துக்களை நாங்கள் எடுத்துக் கூறுகிறோம். நீங்கள் இந்த பன்னிரண்டு கிருபைகளைப் பற்றியும் PT 1949, பக்கம் 184–ல் வாசிக்கலாம்.

யேகோவா தேவன் நம்முடைய இருதயங்களைப் பலப்படுத்துவதில் பரிசுத்தமான பிரியமுள்ளவராயிருக்கிறார்; ஏனெனில் அவர் நம்மை, ஒரு பூமிக்குரிய தகப்பன் தன்னுடைய பிள்ளைகளை நேசிக்கக் கூடிய அளவைக் காட்டிலும் அதிகமாகவும், சிறப்பாகவும், ஞானமாகவும் நேசிக்கிறார். அப்படி அன்பான பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் வாழ்வு வளம் பெறுவதில் சந்தோஷமடைகிறார்கள், (உ.ம்) பள்ளி மற்றும் அவர்களுடைய ஜீவியம் – வேலை சம்பந்தமானவைகள். அவர்களுடைய பிள்ளைகள் உயர்நிலைப் பள்ளியிலும், கல்லூரியிலும், பல்கலைக் கழகத்திலிருந்தும் பட்டம் பெறும் போது எவ்வளவு சந்தோஷமாக அவர்களை வாழ்த்துகிறார்கள்! மேலும் அவர்களுடைய பிள்ளைகள் தங்கள் ஜீவியத்தின் அழைப்பில் ஜெயம் பெறும்போது எவ்வளவாய் சந்தோஷமடைகிறார்கள்!

ஆனால் நம்முடைய அழைப்பில் நமது வெற்றியைக் குறித்து தேவன் வாஞ்சித்திருக்கும் விருப்பமான நம்பிக்கைகளுடன் ஒப்பிடுகையில் அவர்களுடைய மிக விருப்பமான நம்பிக்கைகள் உண்மையில் சிறியவைகளாக இருக்கின்றன. மேலும் அதில் நாம் அனுபவிக்கிற ஒவ்வொரு வெற்றியிலும் அவருடைய சந்தோஷம் மெய்யாகவே மிகப் பெரிதாயிருக்கிறது; அத்துடன் அதில் முடிவாக நாம் வெற்றிபெறும்போது மிகப்பெரிய அளவில் அவர் சந்தோஷமடைகிறார். அவர் நமக்கு சிட்சை அளிப்பதற்காக நம்மிடம் குற்றம் கண்டுபிடிப்பதில் விருப்பமுள்ள கடினமாக வேலை வாங்கும் எஜமானர் அல்ல. நாம் தவறுகளில் இடறும்போது அவர் வேதனைப்படுகிறார். ஏனெனில் அவர் தகப்பன்மார்கள் எல்லாரையும்விட அன்பு மிகுந்தவர். மேலும் நம்முடைய வெற்றிகளில் அவர் மிகுதியாக பிரியப்படுகிறவர்; ஏனெனில், அவர் தகப்பன்மார்களிலெல்லாரையும்விட மிகுந்த அன்பானவர், ஆதலின் அவர் தம்முடைய அன்பு, ஞானம் மற்றும் வல்லமை ஆகிய மிகப்பெரிய தாலந்துகளை நம்முடைய அபிவிருத்திக்காகவும், நம்முடைய தற்செயலானதும், தனிப்பட்டதுமான போராட்டங்களிலும், மேலும் ஒட்டு மொத்தமாக எல்லா போராட்டத்திலும் நம்முடைய இறுதி வெற்றியை அடையவும், பயன்படுத்தும்படி தாராளமாய்க் கொடுக்கிறார். எல்லா நேரத்திலும் நம்முடைய வெற்றியை

ஆர்வத்துடன் எதிர்பார்த்திருக்கிறார். எனவே, நாம் அவருக்காக காத்திருந்தபோதும், அவருக்காக காத்திருக்கையிலும், காத்திருந்த பிற்பாடும், அவருக்காக நம்முடைய வல்லமையை உபயோகிப்பதினால், நம்மை பலப்படுத்துவதில் அவர் மிகுந்த மகிழ்ச்சியடைகிறார்.

அவமானத்தை எண்ணாமல் சிலுவையை சகித்து, தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கச் செய்யும்படி அவருக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்ததான அந்த சந்தோஷம் எப்படிப்பட்டது. தேவனுடைய பிரதிஷ்டை செய்த ஒரு பிள்ளையாக நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிற சத்தியத்தைப் படித்து கற்றுக் கொள்ளும்போது நாம் பெறுகிற சந்தோஷத்தையும் இது அவருக்கு கொடுக்கிற சந்தோஷத்தையுங்கூட நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்! கிறிஸ்துவின் சீஷர்களாக, நாம் கர்த்தருடைய ஸ்தானாபதிகளாயிருக்கிறோம் என்பதை நினைவுகூர்ந்து அவருடைய வாயாக எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை அறிவிப்பதிலும் மெய்யான மேய்ப்பரண்டைக்கு சரியான பாதையில் செம்மறி ஆடுகளை நடத்திச் செல்ல உதவுவதிலும் பயன்படுத்தப்பட வேண்டியிருப்பதால் களிகூர வேண்டும். தேவனுக்கு பிரியமான பிள்ளைகளாக நாம் ஊழியஞ் செய்ய வேண்டுமென்று அவர் விரும்புகிறார். அவருடைய காரியத்திற்காகவும், அவருடைய விருப்பங்களை முன்னேற்றிச் செல்லவும் உதவி புரிய என்னவெல்லாம் நம்மால் முடிகிறதோ, அவற்றைச் செய்வதில் நாம் சந்தோஷமாயிருக்க வேண்டும். பிரியமான பிள்ளைகளாக மகிழ்ச்சியோடு பிதாவானவருக்கு ஊழியஞ் செய்ய வேண்டும். ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்: "படைப்பாற்றலின் பாங்கிலும், அறிவிலும் மகிழ்ச்சியை எழுச்சிபெறச் செய்வது, ஆசிரியரின் ஒப்புயர்வற்ற கலைத்திறனாயிருக்கிறது" என்று கூறியுள்ளார்.

நிஜத்தில், உலக மனுக்குலத்தார் ஜீவனையும், சுயாதீனத்தையும் உண்மையான சந்தோஷத்தையும் பெற்றிருக்கவில்லை. ஆதாமின் வீழ்ச்சி முதற்கொண்டே மனுக்குலமானது பாவத்தின் வல்லமையின் தாக்குதலின் கீழும், மனுஷ கொலை பாதகனான சாத்தானின் தாக்குதலின் கீழும் இருந்து வருகிறது. (யோவா. 8:44). நாம் செத்துக் கொண்டிருக்கிற மனுக்குலத்தார் என்பதை நினைத்துப் பார்க்கும்போது நாம் ஜீவிக்கிற சிலாக்கியத்தையும், அது சம்பந்தமான ஆழ்ந்த அமைதியையும் பெற்றிருக்கிறோம் என்றால் அது அற்புதமானது. "**ஒருவனும் தன் ஆத்துமா அழியாதபடி அதைக் காக்கக்கூடாதே**" என்று வேதவாக்கியம் தெரிவிக்கிறது. (சங். 22:29). அது தம்முடைய சிருஷ்டிகளுக்கு நித்தியமான எதிர்காலத்தை ஆணையிடுகிற தேவனுடைய இரக்கமும். அவரது திட்டமுமாகவும் இராவிட்டால், நாம் ஒன்றையுமே எதிர்பார்க்க முடிந்திருக்காது.

மெய்யான ஜீவன், கிறிஸ்து மூலமாக மட்டுமே வரமுடியும். அவர் மூலமாக மட்டுமே, பாவத்தின் வல்லமையிலிருந்து மெய்யான விடுதலையும் விடுவிக்கப்படுதலும் கிடைக்கக்கூடும். நம்பிக்கையான விசுவாசத்துடன், ஆழ்ந்த அமைதியும், ஆவியில் சமாதானமும் வருகிறது. அதனை கர்த்தருடைய ஜனங்கள் மட்டுமே சரியானபடி உரிமையுடன் கோர முடியும். புறம்பான உலகத்தின் முரட்டுத்தனமான திடீர் தாக்குதல்களைத் தாங்கக்கூடிய, ஆரோக்கியமான பண்புள்ள மெய்யான மகிழ்ச்சி இதில் உள்ளது. இந்த மாதிரியான மகிழ்ச்சியையே வேதவாக்கியங்கள் சந்தோஷம் என்று பெயரிட்டு அழைக்கின்றன.

ராஜரீக சங்கீதக்காரன் தாவீது, நீதிமான்களுடைய சந்தோஷத்தைப் பற்றிப் பேசுகிறார். "**நீதிமான்களே, கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருங்கள்: செம்மையான இருதயமுள்ளவர்களே, நீங்கள் எல்லாரும் ஆனந்தமுழக்கமிடுங்கள்.**" "**உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து, உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்.**" (சங். 32:11; 51:12). தாவீதின் உலகம் தூளாக நொறுக்கப்பட்டது, வெளிப்புறத்திலிருந்து வந்த வல்லமையால் அல்ல, ஆனால் அவனுடைய தவறுகள், அவன் மட்டுமே பொறுப்பாளியான அவனுடைய பாவச் செயல் ஆகியவற்றின் மூலமாக இது நடந்தது. நாத்தான் தீர்க்கதரிசி மூலமாக தேவனால் கடிந்து கொள்ளப்பட்டு, மனசாட்சியில் குத்துண்டதால் கடும் மனவேதனைகளை அனுபவித்து, உள்ளத்தில் சமாதானத்தை இழந்துவிட்ட நிலையில், தாவீது தேவனுடைய ஐக்கியத்தைத் திரும்ப பெற்றுக் கொள்வதற்காகவும், தேவதயவின் நிச்சயத்திற்காகவும் கதறி அழுதார். "**தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்**" (சங். 51:10). அப்படிப்பட்ட சந்தோஷம் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் மாற்ற முடியாத உரிமையாயிருக்கிறது. மேலும் அநேகந்தரம் அமைதியாகவும், எப்போதும் வெளிக்காட்ட முடியாததாகவும் இருந்தாலும், இந்த சந்தோஷம் வாழ்வின் எல்லா சோகமான அனுபவங்கள் எல்லாவற்றின் ஊடாகவும் ஆத்துமாவைக் கொண்டு செல்ல போதுமான வலிமையுடையதாயிருக்கிறது. அத்துடன் "**சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்**" சங். 30:5 என்ற வேதவாக்கியத்தின் உறுதிமொழியும் நமக்கு இருக்கிறது.




இப்போது தேவனுடைய மகத்தான அன்பு திரையால் மறைக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் சீக்கிரத்தில் ஏதேனின் பூரணமும், பேரின்பமும் மகிமையான திரும்பக் கொடுத்தலின்போது மனுக்குலத்தாருக்கு வெளிப்படுத்தப்படும். விரைவிலேயே "**கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி,** [எல்லா மனுக்குலத்தாரும்] **ஆனந்தக்களிப்புடன் பாடி, சீயோனுக்கு** [ராஜ்ய அதிகாரத்திலிருக்கும் இயேசுவிடமும், சபையிடமும்] **வருவார்கள்: நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேலிருக்கும்:**

**சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்: சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்.**" (ஏசா. 35:10).

மெய்யான அன்பு காப்பாற்றி, பாதுகாப்பு அளிக்கவும் நாடுகிற அதே வேளையில், நீதியாக நியாயந்தீர்க்கவும் தப்பறையை முற்றிலும் அழிக்கவும், அதனை வெளிப் படுத்தி, அது அகற்றப்படும்படிக்கு, அதன்மீது ஒளி பிரகாசிக்கும்படி செய்து, அதனால் பாதிக்கப்பட்டவர்கள் வரைக்கும் அதைக் காட்டவும், கிருபையும், சத்தியமும் அவற்றின் ஸ்தானத்தை எடுத்துக் கொள்ளவும் பெருமுயற்சி செய்கிறது. இயேசு தேவனுடைய அன்பால் நிறைந்திருந்தார். ஆனால் பொல்லாங்கு செய்கிறவர்களுக்கு எதிராக மிக அழுத்தமாகப் பேசினார். "**குருடரான வழிகாட்டிகளே, கொசு யில்லாதபடி வடிகட்டி, ஒட்டகத்தை விழுங்குகிறவர்களா யிருக்கிறீர்கள்.**" "**மாயக்காரராகிய... உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாதபடி பரலோகராஜ்யத்தைப் பூட்டிப்போடு கிறீர்கள், நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, பிரவேசிக்கப் போகிறவர்களைப் பிரவேசிக்க விடுகிறதுமில்லை.**" (மத். 23:24,13). அத்துடன் மீண்டும் அவர் தவறிழைத்த பேதுரு விடம், "**எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே (எதிராளி) நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்: தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய்**" என்று சொன்னார். (மத். 16:23). ஆனால் எத்தகைய வித்தியாச மான முறையில் கர்த்தருடைய கடிந்துரைகள் அவருடைய அன்பான சீஷர்களையும், பெருமையான பரிசேயர்களை–யும் பாதித்தன!

**சில நேரங்களில் குறிப்பிட்ட சில ஜனங்கள் இல்லாமல் நீ போக வேண்டியதிருக்கும். அவர்கள் உன் ஜீவியத்தில் இருக்க வேண்டுமென்றிருந்தால் அவர்கள் தொடர்ந்து வந்து சேர்ந்து கொள்வார்கள்.**

"**தேவன் அன்பாகவே இருக்கிறார்!**" என்று அப்போஸ் தலன் அறிவிக்கிறார். தேவனுடைய அன்புக்கு ஒரு சான்றா–வது இருக்கிறதா? என்று சிலர் கேட்கிறார்கள். ஆம், ஆனால் இது வேதாகமத்திற்குட்பட்டது; அத்துடன் அது, காண்கிற கண்ணும், கேட்கிற காதும் இருக்கிறவனுக்கு மிகவும் மாட்சிமையானதும், மூழ்கடிக்கும் அளவுக்கு நம்பிக்கை தருவதாயுமிருக்கிறது. அந்த சான்று இயேசுவே. தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை அனுப்பினார் என்ற உண்மை, அதன்படி தேவன் எவ்வளவு பெரிய விலை கொடுத்து "**நம்மை மீட்டுக் கொண்டார்,**" "நம்மை வாங்கிக் கொண்டார்" என்பதில், கேள்விகளுக்கெல்லாம் அப்பாற் பட்டதாக அவருடைய அன்பு சான்றாக உள்ளது. இங்கே நமக்கு ஆதாரமிருக்கிறது, அது அப்போஸ்தலனுடைய மனதில், "**தேவன் அன்பாகவே இருக்கிறார்**" என்று அவர் எழுதியபோது இருந்த அந்த ஆதாரமே; அவர் தொடர்ந்து சொல்கிறார். "**தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதி னால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத்** (கிரேக்க பாஷையில் – 'ஹிலஸ்மாஸ்' – திருப்தி செய்தல்) **தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது.**" (1 யோவா. 4:9,10).

தேவன் அன்பாகவே இருக்கிறார் என்று வேதாகமம் மீண்டும், மீண்டும் சொல்லுகிறபோதிலும், படிப்படியாக அவர் அதை நிரூபிப்பதாக வாக்களித்திருக்கிறார். என்றாலும், மீட்கும் பொருளை (ஈடுபலியை) அவருடைய அன்பின் வெளிப்பாடாகவும், தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்திற்கு மையமான கருத்தாகவும் ஏற்றுக் கொள்கிறவர்கள் மட்டுமே தேவனுடைய அன்பின் வெளிப்பாடு எதையும் பார்க்க முடியும். அதிகத் தெளிவாக, சிலுவையும், மீட்கும் பொருளும் மையமாக இருக்கும் அந்தத் திட்டத்தை அதிகத் தெளிவாக நாம் கிரகித்து கொள்வதற்குத்தக்கதாக, தேவனுடைய வெளிச்சத்தில் அதிக உண்மையான வெளிச்சத்தை நாம் காண்கிறோம்; ஏனெனில், இது மட்டுமே மனுஷருக்கு இன்னும் கொடுக்கப்பட இருக்கிற தேவனுடைய அன்பின் ஒரே ஆதாரமாயிருக்கிறது, "**நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன் உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்.**" "**அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்பு கூருகிறீர்கள்: இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து, சொல்லிமுடியாததும் மகிமை யால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்க் களிகூருகிறீர்கள்.**" (சங். 32:8; 1 பேது. 1:8).



**"அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள்: இப் பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து, சொல்லி முடியாததும் மகிமையால் நிறைந்தது மாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்க் களிகூர்ந்து,"** 1 பேதுரு 1:8

தேவனுடைய உண்மையான பிரதிஷ்டை செய்த ஜனங்கள் அவருடைய அன்புக்கான ஆதாரங்களை உடையவர்களாயிருக்கிறார்கள். அதனை உலகத்தார் புரிந்து கொள்ள முடியாது, நம்முடைய பிதாவானவர் அவருடைய அன்பான பராமரிப்பினால் அவரை நமக்கு வெளிப்படுத்துகிறார். அவர் எப்போதும் நம்முடன் இருக் கிறார், நாமும் அவருடைய கரத்தில் இருக்கிறோம், அங்கிருந்து நம்மை ஒருவரும் பறிக்க முடியாது. அவர் நமக்கு ஜீவனையும், அவருடனான ஐக்கியத்தையும், போதனையையும், வழிகாட்டுதலையும், நம்மை சீர்திருத்–தும் படியாக அவருடைய சிட்சையையும், அன்பு சந்தோஷம் தெளிந்த புத்தியுமுள்ள அவருடைய பரிசுத்த ஆவியையும், நம்முடைய ஜெபங்களுக்கு அவருடைய பதில்களையும், மற்றும் அவருடைய சொல்லி முடியாத சமாதானத்தையும், சந்தோஷத்தையும், நமக்குத் தருவதில் தமது அன்பை வெளிப்படுத்திக் காட்டுகிறார். (2 கொரி. 13:11; எபே. 1:13,14; பிலி. 4:7,19; 2 தீமோ. 1:7; எபி. 12:6,7; 1 யோவா.1:3,4; 4:13).

தேவனுடைய அன்பிலும், பராமரிப்பிலும் அவருடைய ஜனங்கள் வைத்திருக்கும் உறுதியான நம்பிக்கையை மற்றவர்களுக்கு சான்றாக அளிக்க முடியாது; ஏனெனில் விசுவாசம் மட்டுமே ஏற்றுக் கொள்கிற வகையிலான

சான்றாக இது இருக்கிறது. விசுவாசத்தினால் நாம் அவருடைய அன்பு மற்றும் பராமரிப்புக்கான ஆதாரங்களைக் காண்கிறோம், ஆனால் மற்றவர்களோ அதற்கு எதிரானதையே அங்கே காண்கிறார்கள்; நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம். நம்முடைய விசுவாசத்தினால் நாம் அநேகந்தரம் துன்பம், உபத்திரவம், எதிர்ப்பு மற்றும் பாடுகளில், அன்பு, சந்தோஷம், பராமரிப்பு மற்றும் பரிபாலனத்தின் ஆசீர்வாதங்களைக் காணக் கூடியவர்களாகவும், “**அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது**” (ரோம. 8:28) என்ற தேவனுடைய உறுதியான வாக்கு உண்மையானது என்பதை மனதால் உணரக் கூடியவர்களாகவும் இருக்கிறோம். நாம் “**எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப் போகிறதில்லை: கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை**” (2 கொரி. 4:8,9). தேவனுடைய அன்பின் அனல் ஒரு சால்வையைப் போல நம்மைச் சுற்றி மூடி, இவ்வாறாக ஒடுக்கப்படுதல் மற்றும் மனமுறிவடைதலின் கூறுகளிலிருந்து நம்மைப் பாதுகாக்க உதவியாயிருக்கிறது. அவருடைய குமாரனை நமக்ககான மீட்கும் பொருள் கிரயமாகவும், பின்பு நமக்கு மீட்பராகவும் ஈவாகக் கொடுத்ததை, இந்த ஒரு விஷயத்தை மட்டுமே குறிப்பிட முடியுமேதவிர நாம் சொல்ல முடியாததை, இன்னமும் எடுத்துக்காட்டி விளக்க முடியாததை தேவனுடைய வாக்குத்தத்தங்களில் விசுவாசம் வைத்திருப்பதால் நாம் அனுபவிக்கிறோம்.

பிரதிகூலமான சூழ்நிலைகளின் கீழும் மனஉறுதியோடிருப்பதும், என்னுடைய உதவி தேவைப்படுகிறவர்களுக்காக நம்பிக்கையில் நிலைத்திருப்பதும் பிரயாசப்படுகிறதுமான “**சகலத்தையும் நம்பும்**” அன்பு என்னிடத்தில் இருக்கிறதா? மன உறுதியோடு எல்லாருடைய நலனுக்கும் சிறந்ததை நம்புவதில் நிலைத்திருப்பதும், சிறந்தவற்றிற்காக பெருமுயற்சி செய்கிறதுமான “**சகலத்தையும் சகிக்கும்**” அன்பு என்னிடத்தில் இருக்கிறதா? பூரண அன்பு எளிதில் திடனற்றுப் போவதில்லை. அன்பின் மன உறுதியின் இரகசியம் இதுவே: தேவனிடத்தில் கற்றுக் கொண்டதும், அவருடைய பரிசுத்தத்தில் பங்கு பெற்றிருப்பதும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பதும் அவருடைய கிருபை நிறைந்த உடன்படிக்கையின் நிறைவேறுதலுக்காக, அதைச் சுற்றிலும் நெருங்கியிருப்பவைகள் எவ்வளவு தான் இருளாக இருப்பினும் கலக்கமடையாத நம்பிக்கையுடனிருப்பதுமாகும்.

அன்பினுடைய இந்த நம்பிக்கையான மூலக்கூறு, பரிசுத்தவான்களின் சகிப்புத் தன்மையில் கருத்தைக் கவரும் அம்சங்களுள் ஒன்றாகவும் அவர்களை நல்ல போர்ச்சேவர்களாக தீங்கனுபவிக்கக் கூடியவர்களாகவும் ஆக்குகிறது. இதன் நம்பிக்கையுள்ள தன்மை எளிதாக புண்படுத்தப்படுவதிலிருந்தும் அல்லது கர்த்தருடைய வேலையை எளிதாகத் தடைசெய்வதிலிருந்தும் அதனைத் தடுக்கிறது. மற்றவர்கள் நம்பிக்கை இழக்கும்போது அல்லது ஓடி விடும்போது, நாம் நல்ல போராட்டத்தைப் போராடவும், நமது இரட்சிப்பின் அதிபதியைப் பிரியப்படுத்தவும் தீமையை சகித்துக் கொள்ளும் திராணியை அன்பின் ஆவி நமக்குத் தருகிறது. அன்பினுடைய நம்பிக்கை மனமுறிவை அறியாது, ஏனெனில் அதன் நிலையான நங்கூரம், பிளவுண்ட மலையுடன் உறுதியாக பிணைக்கப்பட்டுள்ளது.

பிரியமானவர்களே, நாம் பெற்றிருக்கும் எல்லாவற்றுடனும், அன்பையும் நாம் பெற்றுக் கொள்வோமாக. வெறும் வார்த்தையில் அல்ல, ஆனால் சத்தியத்தின் சந்தோஷத்தையும், அதன் மீதான அன்பையும், நம்முடைய பரமபிதாவின் அன்பினாலும் நீதியினாலும் நமக்கு கொடுக்கப்பட்டிருப்பதும் புதிய மனதிலும், இருதயத்திலும் வேரூன்றியிருக்கிறதுமான அன்பையும் பெற்றுக் கொள்வோமாக. அது நம்முடைய அருமை மீட்பரின் வார்த்தைகள் மற்றும் செயல்களில் எடுத்துக் காட்டி மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது. மற்றபடி முயன்று அடைகிற யாவும், அவற்றுடன் அன்பை விரும்பி நாம் பெறாவிட்டால் நஷ்டமும் குப்பையுமாகும்! ***




**LHMM - நாசரேத் கன்வென்ஷன் - 2017**
**அக்டோபர் 13,14,15**

**இந்த கன்வென்ஷனில் கலந்து கொண்டு தங்கள் பிரதிஷ்டையை புதுப்பிக்க வந்திருக்கும் ஒவ்வொருவருக்கும் எங்கள் மனமார்ந்த அன்பையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறோம். தேவன் நம்மை மிகுதியாக ஆசீர்வதித்திருக்கிறார். ஏசா. 26:3. அதினிமித்தம் நாம் களிகூருவோம். சங். 28:7; 63:7.**

**தமது பரோஷியா எபிபெனி தூதர்கள் மூலம் நமக்குக் கொடுத்துள்ள சத்தியம் மற்றும் அதன் ஒழுங்குமுறைகளை மரணபரியந்தம் உண்மையுடன் பின்பற்ற தேவன் உதவி செய்வாராக!**
**சங். 25:10; 33:12.**

For all LHMM
Bible Study material:

*For English, Tamil, Malayalam and Kanada Magazines,*
*Translated Leaflets, Tracts,*
*Booklets,*
*Parousia & Epiphany Volumes, etc.,*
*Contact :*



**Laymen's Home Missionary Movement**
11/119-3, Near water tank, South Street,
Mukuperi - 628 616, (Near Nazareth),
Thoothukudi District, Tamil Nadu,
India.

# ஒழுக்கப்பயிற்சிகள், போதனைகள், அனுபவங்கள்


Disciplines, Instructions, Experiences

**"நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன?"**

**(லூக். 6:41–49** NKJ).

நாங்கள் இந்த பாடத்தை E. Vol 9, பக்கம் 19-ல் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்கு இசைவாக முன்வைப்பதில் மகிழ்ச்சியடைகிறோம், ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ள சத்தியத்தின் மீது, கர்த்தர் மேலும் அதிகமான சத்தியத்தை கற்பனையின்மேல் கற்பனையும், பிரமாணத்தின்மேல் பிரமாணமுமாக (ஏசா. 28:10,13) ஒன்றன்மேல் ஒன்றாக வைக்கிறார். ஏற்றகால சத்தியம் தேவனுடைய ஜனங்களுக்கு அவர்களுடைய பல்வேறான பரிபாலன தேவைகளான ஒழுக்கப் பயிற்சிகள், போதனைகள், மற்றும் அனுபவங்களுக்கு ஏற்றபடி கொடுக்கப்படுகிறது. ஏனெனில் தேவனுடைய வார்த்தை அவர்களுடைய தனிப்பட்ட தேவைகளுக்குப் பொருந்தும்படி உருவாக்கப்பட்டிருக்கிறது. இது தேவன் மற்றும் அவருடைய சத்தியத்தின் நடைமுறைத் தன்மையைக் காட்டுகிறது!

(1) குற்றங்கள் நம்முடையதாக இல்லாமல், மற்றவர்களுடையதாக இருந்தாலும், அவை வெளியரங்கமாக்கப்பட வேண்டியதும், நமக்கு அடிக்கடி வேதனை தருவதாக இருந்தாலும்கூட, ஒருவனிடத்திலுள்ள குற்றங்காணும் மனப்பான்மையை உற்சாகப்படுத்துவது தவறு என்று லூக். 6:41-ல் கர்த்தர் எடுத்துக் காட்டுகிறார். உண்மையான சகோதர அன்பு, நாம் பலதரப்பட்ட வழிகளிலும் அபூரண மானவர்கள் என்பதையும், மற்றவர்களுடைய குற்றங்கள் நமக்கு மகிழ்ச்சியற்றதாக இருப்பதற்கு சமமாக, நம்முடைய குற்றங்களும் மற்றவர்களுக்கு மகிழ்ச்சியற்றதாக இருக்கும் என்பதையும் நினைவு கூருகிறது. மற்றவர்கள் நம்முடைய வீழ்ச்சியினால் ஏற்படுகிற குறைபாடுகளை அன்பாதரவுடனும், நம்முடைய பலவீனங்களை நீடிய பொறுமையுடன் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று நாம் விரும்புவதுபோல அதே சகோதர அன்புடன், நாமும் மற்றவர்களிடம் அதே மாதிரியான நீடிய பொறுமையையும், சகிப்புத் தன்மையையும் பயிற்சி செய்ய வேண்டும்.




(2) விடாப்பிடியாக தொடர்ந்து குற்றங்காணும் மனப்பான்மையுடன் தன்னிடமுள்ள தவறுகளை கண்டு கொள்ளாமல், மற்றவர்களுடைய தவறுகளைப் பெரிதுப் படுத்துவது ஒரு மாய்மாலமாகும் – நீதிக்காக வைராக்கியம் காட்டுவது போன்ற நடிப்பேயல்லாமல் இது உண்மையல்ல என்பதை கர்த்தருடைய வார்த்தை (வசனம் 42) உணர்த்துகிறது. நீதிக்காக உண்மையாகவே வைராக்கியம் காட்டுவது எப்போதுமே சுயஒழுக்கத்துடன் தொடங்குவதாக இருக்கும். கர்த்தருடைய வழிநடத்துதலுக்கும் போதனைக்கும் கீழ்ப்படிந்து நடக்கும்படி ஒருவன் தன் சொந்த இருதயத்தை ஒப்புக் கொடுக்காவிட்டால் அவன் மற்றவர்களை அப்படிச் செய்யுமாறு போதிக்க அவனுக்கு அவர் அதிகாரம் கொடுப்பதில்லை. கர்த்தருக்கென்று தன்னை முழுவதுமாக பிரதிஷ்டை செய்து அவருடைய பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டவர்கள் மட்டுமே, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும், விசுவாச வீட்டாருக்கு ஊழியஞ்செய்யவும் தேவனால் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் மட்டுமே, தொடர்ந்து உண்மையாகத் தங்களை தேவ ஆவியின் வழி நடத்துதலுக்கு கீழ்ப்படிந்து நடக்கும்படிச் செய்து, பாவமும் அசுத்தமுமான பழைய வழிகளை விட்டு பரிசுத்தமான வழிகளுக்கு வந்த பாத்திரவான்களாக அல்லது கர்த்தருடைய வீட்டாருக்குப் போதித்து, சேவிக்கும் ஊழியத்தை திறமையுடன் நிறைவேற்றக் கூடியவர்களாகயிருக்கிறார்கள்.

(3) கர்த்தர் நம்முடைய அன்றாட வாழ்க்கையில் உள்ள பொதுவான செயல்களையும் வார்த்தைகளையும் நம்முடைய இருதயங்களை அளவிடும் குறியீடாக சுட்டிக்காட்டி (வசனங்கள் 43-45) சொல்கிறார், "**நல்ல மரமானது கெட்ட கனி கொடாது, கெட்ட மரமானது நல்ல கனி கொடாது. அந்தந்த மரம் அதனதன் கனியினால் அறியப்படும்:**" அதுபோல, "**நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான்: பொல்லாத மனுஷன் தன் இருதயமாகிய பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக் காட்டுகிறான்: இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய் பேசும்.**"

ஒவ்வொரு நாளும் நம்முடைய வாழ்க்கையின் சிறிய காரியங்களிலும் மற்றும் பெரிய காரியங்களிலும், நம்முடைய வார்த்தைகளும் செயல்களும் நியாயத் தீர்ப்பில் நமக்கு சாதகமாகவோ அல்லது எதிராகவோ சாட்சியாக இருக்கும் என்று தோன்றுகிறது. ஆதலின் எவ்வளவு ஜாக்கிரதையுடன் வாழ்க்கையின் ஒவ்வொரு செயலையும், வார்த்தையையும் நாம் காத்துக் கொள்ள வேண்டும். நாம் தவறு செய்து விட்டால், "**ஒருவன் பாவஞ்செய்வானானால், நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்**" (1 யோவா. 2:1) என்பதை நினைவு கூர்ந்து, நாம் எப்போதுமே உடனடியாக மனம் திரும்பி மன்னிப்பைத் தேட வேண்டும்.




இயேசு கிறிஸ்து மூலைக்கல்

(4) வசனம் 46-49-ல் கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்கவும், அதைப் போலவே அதன்படி செய்வதற்கும் உள்ள அவசியத்தைக் குறித்து கவனிக்க நம்முடைய கவனம் அழைக்கப் படுகிறது. கர்த்தர் சுட்டிக்காட்டுகிறபடி செய்வது, உண்மையில்லாத வெளித் தோற்றமான நீதியைக் குறித்து காட்டு வதாயிராமல், தீவிரமான, முழு அளவிலான சீர்திருத்தமும் (ஒழுக்கப் பயிற்சியும்) பெருமை, கர்வம் ஆகிய எல்லா குப்பைகளின் ஊடாக ஆழமாகத் தோண்டி, உண்மையும் நீதியுமான குணங்களை நன்றாக அஸ்திபாரமிடுவதைக் குறித்துக் காட்டுகிறது. ஆழமாகத் தோண்டி நிச்சயமான அஸ்திபாரத்தின் மீது இப்படிப்பட்ட மேற் கட்டுமானம் கட்டப்பட்டிருக்கும்போது கன்மலையாகிய கிறிஸ்துவினிடத்தில் அவருடைய ஒழுக்கப் பயிற்சிகள், போதனைகள், மற்றும் அனுபவங்கள் ஆகியவற்றினிடத்தில் வராமல், நாம் உறுதியான எதையும் காணமுடியாது. "**எல்லோரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில், அவர்களோடேகூடச்சென்ற ஞானக்கன் மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்: அந்தக் கன்மலை கிறிஸ்துவே.**" (1 கொரி. 10:4; 3:11; எபே. 2:20; 1 பேது. 2:6-8).

ஆம், அனுபவங்கள்! சத்தியம் மற்றும் அதன் ஆவியின் இயல்பான தன்மையில் அவர் நமக்கு ஆச்சரியமான பாதுகாப்பை தந்திருக்கிறார். சத்தியத்தை அதிகமதிகமாக கற்றுக் கொள்ளும்போது, சத்தியத்தால் பரிசுத்தமாக்கப்படுவது போல, (யோவா. 17:17) கர்த்தருடைய ஆவியை நாம் அதிகமதிகமாக மனதில் பெற்று, ஆவியினால் செயல்படுத்தப்படுவதற்குத்தக்கதாக நாம் உலகம், மாம்சம், பிசாசு ஆகியவற்றை எதிர்த்து நிற்க கூடியவர்களாவோம். அவைகள் நம்மைப் பலவழிகளிலும் அவிசுவாசத்துக்குள்ளாக மயக்கிப் போட தேடுகிறடியால், "**தேவனுக்கு கீழ்ப்படிந்திருங்கள்: பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப் போவான்.**" (யாக். 4:7; 1 பேது. 5:8,9; எபே. 6:13). மேலும் "**இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தில்**" (உலகத்தில்) (கலா. 1:4) சத்தியமும், அதன் ஆவியும் பிரசித்தமில்லாதவைகளாக இருக்கின்றன. நாம் இப்பொழுது இந்த பொதுவான விழுந்துபோன மனுக்குலத்தை கவர்ந்திழுக்க முடியாது, "**ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது: அதைக் கண்டு பிடிக்கிறவர்கள் சிலர்**" (மத். 7:14) அல்லது அதைக் கண்டுபிடிக்க விரும்புகிறவர்களும்கூட சிலர்தான். கிறிஸ்துவைப் போன்ற வளர்ச்சிக்கு அவசியமான ஒழுக்கப் பயிற்சிகளின் கடுமையான தன்மையானது, இயற்கையாகவே தேவனுடைய உண்மையான ஜனங்கள் மத்தியில் ஒரு இடத்தைப் பெறுவதற்கு தகுதியில்லாதவர்களைத் துரத்திவிடுகிறது.

வீணான வார்த்தைகள்
ஆக்கினையைக் கொண்டு வருகிறது
மத்தேயு 12:36,37



வாயை அடக்கி வை!
சங்கீதம் 39:1

## கொலை செய்யும் நாவு

நாம் நம்முடைய வாய்களுக்கு நாம் ஒழுக்கப் பயிற்சி கொடுக்க வேண்டும். மத். 12:36-ல் "**மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள்** (பிரயோஜனமில்லாத, தீங்கு விளைவிக்கிற) **யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும்**" என்று கர்த்தர் நம்மை எச்சரித்திருக்கிறார். நம்முடைய எல்லா வார்த்தைகளும், நம்முடைய இருதயத்தின் அளவு குறியீடாக கர்த்தரால் எடுத்துக் கொள்ளப் படுகிறது. நம்முடைய வார்த்தைகள் கலகம் விளைவிப்பதாக அல்லது துரோகமானதாக அல்லது அற்பமானதாக அல்லது மரியாதை குறைவானதாக அல்லது கனிவற்றதாக, நன்றியற்றதாக, பரிசுத்தமற்றதாக அல்லது அசுத்தமானதாக இருந்தால், இருதயமும், "**இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்**" என்ற கோட்பாட்டின்படியே நியாயந்தீர்க்கப்படும். நம்முடைய அனுதின வாழ்க்கையின் பல்வேறான சூழ்நிலைகளிலும் நம்முடைய வார்த்தைகள், தேவனுக்கு முன்பாக நம்முடைய இருதயங்களின் நிலைமைக்கு தொடர்ந்து சாட்சியாயிருக்கிறது. ஆகவே, பிரசங்கி 5:2-லுள்ள நமது கர்த்தருடைய வார்த்தைகள், இந்த காரியத்தின் அடிப்படையில் எவ்வளவாய் காலத்திற்கேற்ற புத்திமதியாயிருக்கிறது. "**நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமல்இரு**" என்ற வார்த்தைகளுக்கு அர்த்தம் இருக்கிறது. ஆகவே, நாம் பேசுகிற வார்த்தைகளினால் பொறுப்புக்குட்படுகிறோம். எனவே சுய ஒழுக்கப் பயிற்சியே நமக்கு பலமான கட்டுப்பாட்டு கருவியாயிருக்கிறது. "**நம்மை நாமே நிதானித்து அறிந்தால்** (சரி செய்து கொண்டால்) **நாம் நியாயந்தீர்க்கப்படோம்: நாம் நியாயந்தீர்க்கப்படும்போது, உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு, கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம்.**" (1 கொரி. 11:31,32) (பெரும்பாலும் நம்முடைய தவறுகள் நம்மை சிக்க வைக்கும் அனுபவங்கள் மூலமாகவே).

தீமையிலும் அல்லது மரியாதை இல்லாத வழியிலும்கூட அங்குமிங்குமாக அசைவதும் தேவனுக்கு கனவீனத்தை ஏற்படுத்துகிறதுமான இந்த நாவுடன் எத்தனை பயங்கரமான ஒரு பொறுப்பு இணைக்கப்பட்டுள்ளது. "**தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து ஜெபம் பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்**" (1 பேது. 4:7; 1:13; 5:8) என்ற அப். பேதுருவின் தடை உத்தரவு எவ்வளவு அவசியமாயிருக்கிறது!





நாம் சுய ஒழுக்கப் பயிற்சியையும், போதனையையும் அப்பியாசிப்பதாக இருந்தால், பூரணமான ஜீவியாயிருப்பதும், குணாம்சத்தில் பூரணமாயிருப்பதும் இரண்டு வித்தியாசமான காரியங்கள் என்பதை எப்பொழுதும் மனதில் வைத்திருக்க வேண்டும். சரீரம், மனம், கலைக்குரிய, சன்மார்க்கம் மற்றும் மத சம்பந்தமான திறமைகளில் பூரண ஜீவியாயிருப்பது தேவனுடைய கிரியையாயிருக்கும்போது குணாம்சத்தின் பூரணமானது, புத்தியுள்ள சிருஷ்டி தெய்வீக வழிநடத்துதல் மற்றும் மேற்பார்வையின்கீழ் தெய்வீக பிரமாணத்துக்கு கீழ்ப்படிந்து, நடப்பதின் மூலமாக உருவாக்கும் வேலையாகும். ஆதாம் ஒரு பூரண சிருஷ்டியாக, குற்றமற்றவராக, சுதந்திரமாக தன்னுடைய ஆதி அழகில் மகிமையுள்ளவராகவும் இருந்தார். ஆனால் குணாம்சத்தைக் கட்டும் வேலையில் அவர் விரைவாகவே தோல்வியடைந்து, தன்னுடைய பூரணத்தை இழந்தார். குணமானது சோதனையில்லாமல் [அனுபவங்கள்] முழு வளர்ச்சி அடையாது. அது ஒரு செடியைப் போலிருக்கிறது. முதலில் அது மிருதுவானதாயிருக்கிறது. தேவ அன்பாகிய சூரிய வெளிச்சம் அதற்கு ஏராளமாகத் தேவைப்படுகிறது. அவருடைய கிருபையாகிய மழையால் அடிக்கடி நீர்ப்பாய்ச்சப்படுகிறது. விசுவாசத்துக்கும் கீழ்ப்படிதலைத் தூண்டுவதற்கும் நல்ல அஸ்திபாரமாக அவருடைய குணத்தைப் பற்றிய அறிவை உபயோகிப்பதின் மூலம் அதிக வளர்ச்சியடைகிறது. பின்பு இந்த அனுகூலமான நிலைமைகளில் இவ்வாறு வளர்ந்துவரும்போது ஒழுக்கப்பயிற்சி என்னும் கரத்தால் கிளை நறுக்கப்படுதலுக்குத் திராணியுள்ளதாயிருக்கிறது. சில கஷ்டங்களைச் சகிக்கக் கூடியதாகவும் இருக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாக குணத்தில் பெலனடைந்து வளர்ச்சியடையும் போது அதற்கு உபயோகிக்கப்பட்ட பரீட்சைகள் அது அதிக பெலனையும், அழகையும், கிருபையையும் விருத்தி செய்யவும் இறுதியாக அது நிலையாக வளர்ச்சியடைந்து உறுதியடைந்து பூரணமாகும்வரைக்கும் பாடனுபவித்தலாகிய ஒழுக்கப் பயிற்சி மூலம் ஊழியஞ் செய்கிறது. பிரதிஷ்டை செய்திருக்கும் தேவனுடைய ஊழியக்காரர்கள் எல்லாருக்கும் சீர்திருத்தமும், ஒழுக்கப்பயிற்சியும் தேவைப்படுகிறது. ஏனெனில், "**கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்.**" "**எந்த சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்: ஆகிலும் பிற்காலத்தில் அதில்** (சரியானவிதத்தில்) **பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்.**" (எபி. 12:6,11). "**ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்.**" (கலா. 6:8).

பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளையாக நாம் நம்முடைய சிலுவையை எடுத்துக் கொண்டு, நம்முடைய அதிபதியான இயேசு கிறிஸ்துவுக்குப் பின் செல்வோம். "**தன் சிலுவையை சுமந்து கொண்டு, எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்க மாட்டான்**" (லூக். 14:27). தேவனுடைய பங்கில் இது தற்கால ஜீவியத்தில் அவரிடமிருந்து தகப்பனுக்குரிய அன்பு, பராமரிப்பு, ஒழுக்கப்பயிற்சி, ஆலோசனை, போதனை, பாதுகாப்பு, அனுபவம் மற்றும் முடிவு வரை உற்சாகப்படுத்துதலை நாம் பெறுவதையும், அதன்பிறகு நாம் நித்திய இளைப்பாறுதல், சந்தோஷம் மற்றும் சமாதானத்தை அனுபவிக்கப் போவதையும் குறித்துக்காட்டுகிறது. கர்த்தர் தம்முடன் உடன்படிக்கை செய்ய விரும்புகிறவர்கள் யார் என்பதை மட்டும் தேடவில்லை, மாறாக அந்த உடன்படிக்கையின் வழியிலுள்ள, சோதனை, ஒழுக்கப் பயிற்சி, மற்றும் பரீட்சைகள் பற்றிய பாடங்கள் மத்தியில் ஜெயம் பெறுவதினால் நிறைவேற்றுகிறவர்களையே தேடுகிறார் என்பது கண்டுணரப்படுகிறது. அவர் தம்முடைய ஜனங்களை சோதித்து கண்டுபிடித்து, தம்முடைய ஊழியத்தைச் செய்வதற்கென்று பிரித்தெடுக்க விரும்புகிறார். பலமான சுயசித்தமுள்ளவர்களையோ, மாம்சத்தின்படி பெலமுள்ளவர்களையோ அல்ல, அதற்கு மாறாக, மாம்ச சித்தத்தை விட்டுவிட்டு, தங்களுடைய மனங்கள் புதிதாகிறதினாலே மறுரூபமாகும்படி தங்களை முற்றிலுமாக கர்த்தருக்கு ஒப்புக் கொடுப்பவர்களையே தேடுகிறார். இறுதியான வெற்றி பெறுவதற்காக – "**கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பெலப்பட வேண்டும்.**" ஓ, தேவனுடைய ஜனங்களாகயிருப்பது எத்தகைய ஆசீர்வாதமானது!

ஆனால் தேவனுடைய வார்த்தையின் கோட்பாட்டு உபதேசங்களைத் தெளிவாகப் புரிந்துகொண்டு அதனை விசுவாசத்தின் ஓர் நிச்சயமான அஸ்திபாரமாக நாம் பெற்றிருப்பதால், இருதயத்தின் நம்பிக்கையுறுதியாகிய மேல் கட்டுமானத்தையும் நன்றாக கவனிக்க வேண்டியது அவசியமிருக்கிறது. ஏனெனில் அது எப்போதும் வெளியே தெரியக் கூடியதாயிருப்பதால் உண்மையாகவே அஸ்திபாரத்தைவிட அதிகமாக புயல்கள் மற்றும் வெள்ளங்களால், அதிக ஆபத்திலிருக்கிறது. பரீட்சிக்கப்பட்டு, உண்மையுள்ளதென்று நிரூபிக்கப்பட்ட விசுவாசம், மேலும் அக்கினி போன்ற சோதனையை சகித்து, போதனையிலும் மற்றும் ஒழுக்கப் பயிற்சியிலும் ஜெயம் பெற்றதாக வருகிற விசுவாசம், தேவனுடைய பார்வையில் மிகவும் விலையேறப் பெற்றதாயிருக்கிறது (1 பேது. 1:7) என்று நம்முடைய ராஜாவின் ராணுவத்தில் மற்றொரு உண்மையுள்ள துணைநிலை

அதிபதியான அப்போஸ்தலன் பேதுரு நம்மிடம் சொல்கிறார். நாம் ஒரு போராட்டத்தின் ஊடாக கடந்து செல்லுகிற ஒவ்வொரு நேரத்திலும் சத்தியத்தின் அறிவாற்றல் சார்ந்த மதிப்பீட்டை மட்டுமல்லாமல், தேவனிடத்தில் நாம் கொண்டிருக்கும் உறுதியான நம்பிக்கை, அவருடைய வாக்குத்தத்தங்கள் மீதுள்ள நம்முடைய நம்பிக்கையுறுதி, இருதயத்திலும், நோக்கத்திலும் உள்ள நம்முடைய உத்தமம், நீதியின் மீதுள்ள நம்முடைய வைராக்கியம், நம்முடைய குணாதி-சயங்கள் யாவையும் இடைவிடாது காத்துக் கொள்வதினால் அவை பலமாக வளர்ச்சி பெற்று, அதிக ஒத்திசைவாக கிறிஸ்துவின் சாயலில் அதிகமாக வளர்ச்சியடைகின்றன; அத்துடன் இந்த நோக்கத்தை மனதில் வைத்து நம்மை ஒழுக்கப்பயிற்சிக்கு உட்படுத்துகிற நம்முடைய ராஜாவுக்கு நாம் மிகவும் பிரியமானவர்களாக இருக்கிறோம்.




“**உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்**” (1 பேது. 4:12,13). இக்காலத்திலிருக்கும் தீமையின் ஆட்சி முடிவுக்கு வரும். முடிவு காலமாகிய இந்த காலத்தில், “**அநேகர் சுத்தமும் வெண்மையுமாக்கப்பட்டு, புடமிடப்பட்டவர்களாய் விளங்குவார்கள்**” (தானி. 12:10) என்று தானியேல் கூறுகிறார். மல்கியா இந்த காலத்தின் சோதனைகளையும், பரீட்சைகளையும், “**புடமிடுகிறவனுடைய அக்கினிக்கும்,**” “**வண்ணாருடைய சவுக்காரத்துக்கும்**” ஒப்பிடுகிறார். (மல். 3:2,3). நமது தேவனுடைய வார்த்தை கர்த்தருக்காகவும், அவருடைய சத்தியத்துக்காகவும் தைரியமாக, வீரமுடன் போர்புரிகிற இந்த போர் வீரர்களுக்கு வாக்குத்தத்தங்களும், எச்சரிப்புகளும், ஆலோசனைகளும் நிறைந்ததாக இருக்கிறது. யுத்தத்தில் களைத்துப்போன தேவனுடைய ஜனங்களுக்கு – இரண்டு பொக்கிஷங்களான பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் பண்டக சாலையில் ஆறுதலும் தேறுதலுமளிக்கும் அநேக வார்த்தைகள் காணப்படுகின்றன.

தேவனுக்குப் பிரியமானவனே, நம்முடைய மகாராஜா உன்னைப் பற்றி நினைக்கிறாரா என்று சந்தேகப்படும் அளவுக்கு, எப்பக்கத்திலும் நீ சோதனைகளால் கடுமையாக நெருக்கப்பட்டிருக்கிறாயா? உனக்குரிய அவருடைய அன்பையும், பராமரிப்பையும் – அதனால் உனக்குரிய அவருடைய விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களையும் சந்தேகிக்கும்படியாக சோதிக்கப்படுகிறாயா? தைரியமிழந்து, சோர்ந்துவிட்டாயா? மிகப் பெருந்திரளான, அதிக பலம் வாய்ந்த பகைவர்கள் இருப்பது போலத் தோன்றுகிறா? நிந்தைகள் உன்னை நொறுக்கி தூளாக்கும் பாரத்துடன் வருகிறதா, மேகங்கள் பாதுகாப்பற்றதாகத் தோன்றுகிற உன் தலைக்குமேல் அதிக பாரத்துடன் தொங்கிக் கொண்டிருக்கிறதா? யேகோவா தேவன் தம்முடைய ஊழியக்காரர்களுக்காக ஏற்பாடு செய்திருக்கிற பராமரிப்புகளை ஏற்றுக் கொள்ளும் திறனை இருள் மேகங்கள் மறைக்கிறதா? “**அன்றியும், சகோதரரே, உங்களுக்குள்ளே பிரயாசப்பட்டு, கர்த்தருக்குள் உங்களை விசாரணை செய்கிறவர்களாயிருந்து, உங்களுக்குப் புத்தி சொல்லுகிறவர்களை நீங்கள்** (உயர்வாக) **மதித்து அவர்களுடைய கிரியையினிமித்தம் அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக் கொள்ளும்படி உங்களை வேண்டிக் கொள்ளுகிறோம். உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள்**” (1 தெச. 5:12,13). அநேகமாக நம்முடைய முதல் சிந்தனை, தங்களுடைய மேசியாவின் வருகைக்காக தொடர்ந்து எதிர்பார்த்துக் கொண்டிருந்த யூததேசம் பற்றியது தான்! அவர்களுக்கு கொடுக்கப்பட்ட அனுபவங்களும், போதனைகளும் செவிடான காதுகளிலும், குருடான கண்களிலும் விழுந்தன. கிறிஸ்தவ உலகம் “ஏற்ற காலத்தில் விளங்கி வருகிற “**எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக் கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே. இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கி வருகிறது**” என்ற (1 தீமோ. 2:6) எல்லாருக்குமான மீட்கும் பொருள் வாக்குத்தத்தத்தை தெரிந்து கொள்ளாமல் அறியாமையில் ஜீவிப்பதை பார்ப்பது எவ்வளவு துக்கமான காரியமாயிருக்கிறது. “**நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம் போலிருக்கும்**” (நீதி. 4:18) என்று தேவன் விரும்புகிற முன்னோக்கிச் செல்லும் இயக்கத்தை ஏற்றுக் கொள்வதற்கு மாறாக, பெயரளவிலான கிறிஸ்தவ சபை அமைப்பு சபைப்பிரிவுகளின் நம்பிக்கைகளாகிய பாரம்பரியத்திலும் தனிமனித கொள்கைகளிலும் நிலைமாறாது மூழ்கியிருக்கிறது.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஆயிர வருட யுக மத்தியஸ்தர் ஆளுகைக்கு முன்பு, பிதாவினால் நியமிக்கப்பட்ட ஊழியக்காரராக, ஐந்து பிரதிஷ்டை செய்த வகுப்பாரை ஆயத்தம் செய்வதற்காக திரும்பி வந்திருக்கிறதை ஏற்றுக் கொள்ளாத அநேகருடைய இந்த விருப்பமின்மையால் அப். 3:19-21-ல் சொல்லப்பட்ட முந்தின சீருக்கு கொண்டுவரும் திரும்பக்கொடுத்தல் வேலையைச் செய்வதில், ஒழுக்கப் பயிற்சியளிக்கப்பட்டு, போதிக்கப்பட்டும் அனுபவம் பெற்றவர்களாக இருக்கும் சிலாக்கியத்தை அவர்கள் அடைந்து கொள்ளவில்லை. “**என் ஜனங்களே** (தேவனுக்குப் பிரியமானவர்களே) **அவளை** (பெயரளவிலான சபை அமைப்புகள்) **விட்டு வெளியே வாருங்கள்**” என்ற அழைப்புக்கு கீழ்ப்படிந்தவர்களுக்கு கொடுக்கப்பட்டுவருகிற ஆசீர்வாதம் எவ்வளவு பெரிதானதாயிருக்கிறது. “சீயோன், மோரியா, ஆக்ரா, பெஸிதா மற்றும் ஒப்பேல் ஆகியவற்றால் அடையாளமாக சொல்லப்பட்ட, இழந்து போனதைத் திரும்ப கொடுத்தலுக்கு முந்தைய பிரதிஷ்டை செய்த ஐந்து வகுப்பாராகிய சிறுமந்தை, மூப்பரான பாத்திரவான்கள், திரள்கூட்டம், வாலிபரான பாத்திரவான்கள் மற்றும் பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளயக்காரர்கள் ஆகிய எல்லோரையும் தேவன் தெரிந்து கொள்ளப்படாதவர்களை பரிசுத்த பெரும்பாதையில் முன்னேறிச் செல்வதற்கு உதவி


செய்கிற விசேஷித்த கருவிகளாக்குவார்." (PT'77, பக், 38).

யேகோவா தேவன் தம்முடைய இயக்கத்தை எபிபெனியால் பிரகாசிப்பிக்கப்பட்ட பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளயக்காரர்களின் கரங்களில் ஒப்புக்கொடுத்திருக்கிறார் என்பதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. யேகோவா தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களாக செயல்படுவதற்கு வருகிற அவர்களுடைய சிலாக்கியத்தை அடைவதற்குத் தேவையான அனுபவத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்கள் திரள்கூட்டத்தார், மற்றும் வாலிபரான பாத்திரவான்கள் மத்தியில் ஊழியஞ் செய்திருப்பார்கள். அவர்களை சமஸ்த பொதுச் சபையில் [General Church], அவர்களுடைய திறமைக்கேற்றபடி ஊழியக்காரர்களாக ஏற்றுக் கொள்வது ஒரு சிலாக்கியமாக இருந்து வந்தது, இப்போதும் தொடர்கிறது. இது கனத்துக்குரியதாக மட்டுமல்லாமல், அந்த வேலையைச் செய்வதற்கு தேவையான அதிகாரத்தோடுகூடிய ஒரு ஸ்தானமாகவும் இருக்கிறது! இந்த மானிட போதகர்கள் நேசிக்கப்படவும், ஆதரிக்கப்படவும், மரித்து ஏற்றுக் கொள்ளப்பட்டு உண்மையுடன் உதவி செய்யப்படவும் வேண்டும். எதிர்த்து நிற்கும் ஆவியையும், அதைத் தொடர்ந்து வரும் அன்பில்லாத வார்த்தைகளையும் அனுமதிக்காமல் ஜாக்கிரதையாய் இருப்போமாக. ஒவ்வொருவரும் செம்மறியாடுகளைப்போல, ஓரளவாவது ஓநாய்களைக் குறித்து கவலைப்பட்டவர்களாக அல்லது குறைந்தபட்சம் பயமுறுத்தப்பட்டவர்களாயிருக்கிறோம். கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த செம்மறியாடுகள் ஒன்றாகக்கூடி வந்து மகாபிரதான மேய்ப்பரின் குமாரனுக்கும், மற்றும் தங்களுக்காக கர்த்தருக்குள் அவரால் நியமிக்கப்பட்ட உதவி மேய்ப்பர்களுக்கும் கீழாக இளைப்பாறிக் கொண்டு, சமாதானமாக, சந்தோஷமாக, ஆறுதலாக ஏன் இருக்கக் கூடாது?




யேகோவாவின் இயக்கம் இன்னொரு யுகமாறுதலின் காலத்தில் இருப்பதால் தேவனுடைய பிள்ளைகள், ஒவ்வொருவரும் தங்கள் சரீரத்தை அடக்கி கீழ்ப்படுத்தவும், முறுமுறுக்காமல் தங்கள் நாவைக் காத்துக் கொள்ளவும், தேவனுடைய எல்லா நன்மைகளுக்காவும் அவரைப் போற்றி துதித்து, நன்றி விசுவாசமும், நன்றியுணர்வும் நிறைந்தவர்களாயிருப்பது அதிக அவசியமாயிருக்கிறது. ஆ! இங்கே தான் விசுவாசம் தன் வெற்றியை உறுதிப்படுத்த வேண்டும். "**நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்**" (1 யோவா. 5:4) என்று எழுதியிருக்கிறது இல்லையா? இப்பொழுது உங்கள் விசுவாசம் சோதனையில் இருக்கிறது. முன்பிருந்த பரிசுத்தவான்கள்கூட பெற்றிராததும், சிலர் மட்டுமே பெற்றிருக்கும் தேவனுடைய மகிமையான சத்தியத்தை அறிந்து கொள்ளும்படியாக நீ ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறாய். மிகச் சிறந்த ஆசீர்வாதங்களும், மிகச் சிறந்த வெளிச்சமும் பெறுவதற்கு ஒத்திசைவான விசுவாசம் தேவைப்படுகிறது. இந்நேரத்தின் சவால்களை சந்திக்க நீ எழும்பி வருவாயா? பொல்லாங்கன் எய்யும் அக்கினி யாஸ்திரங்களையெல்லாம் எதிர்த்து நிற்கிற உண்மையுள்ள சிலுவை வீரன் என்று நீ நிரூபிப்பாயா?

எளிதில் உடைந்து நொறுங்குகிற சில பொருட்கள் இருக்கின்றன. அவை ஒழுக்கப்பயிற்சி பெறாதவர்களைக் குறித்துக் காட்டுகின்றன. அதுபோல சில பொருட்கள் நாருள்ளதும், பலமுள்ளதும், தாங்கும்தன்மையுள்ளதாகவும் இருக்கின்றன. பலம்மிக்கதும் உறுதியாக நிலைத்திருக்கும் குணப்பண்புகளான – மனோதிடம், சுய அடக்கம், பொறுமை, நீடிய சகிப்பு, விசுவாச உண்மைத்துவம் போன்ற குணாம்சமுள்ளவர்களையே கர்த்தர் தமக்காக தெரிந்து கொள்கிறார். எதிராளியின் எந்த அக்கினியாஸ்திரங்களினாலும் பயந்து கர்த்தரை விட்டு ஓடிவிடாமல் அவருடன் நெருங்கி நடக்கிற சிலர் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட இருதயமுள்ளவர்கள் எல்லாரும் முற்றிலும் கர்த்தருடையவர்கள் – அவர்களுக்கு சொந்தமானவர்கஎல்ல. கர்த்தர் எங்கு வழிநடத்தினாலும், அங்கெல்லாம் அவரைப் பின் தொடர்ந்து செல்பவர்கள், ஏனெனில், அவர்களுக்கு தேவனுடைய சித்தத்தைத் தவிர வேறு சித்தம் எதுவுமில்லை. இவர்கள் தற்கால ஜீவியத்தில் பரீட்சை ஒழுக்கப் பயிற்சி நெறி மற்றும் சோதனைகள் உள்ள இடுக்கமான வழியில் கர்த்தரைப் பின்பற்றி நடப்பார்கள். மேலும் படிப்படியாக சிறுமந்தைக்கு அவர் அறிவித்தபடி, "**அவர்கள் பாத்திரவான்களானபடியால் வெண்வஸ்திரந்தரித்து என்னோடேகூட நடப்பார்கள்**" (வெளி. 3:4). திரள் கூட்டமும் "**வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில்** (வெற்றியின்) **குருத்தோலைகளைப் பிடித்துக் கொள்வார்கள்**" (வெளி. 7:9,13). இதே ஆசீர்வாதம், கர்த்தருக்கென்று தங்களைப் பிரதிஷ்டை செய்தலில் உண்மையுள்ளவர்களாக, இருப்பதின் பலனாக சுத்தமான குணாம்சங்களைப் பெற்றிருக்கிற யாவருக்கும் அடிப்படையில் பொருந்துவதாயிருக்கும். (PT'65, பக்கம் 60).




எல்லாவிதமான பரீட்சைகள், சோதனைகள், மற்றும் கஷ்டங்களிலிருந்தும், தப்பியோடுகிற எவனும் உண்மையிலேயே, அவன் தேவனுடைய பிள்ளை (குமாரன்) என்ற

உறவு முறையில் இருக்கிறானா என்பதைக் குறித்து சந்தேகம் கொள்ள எல்லா காரணமுமிருக்கிறது. அவன் தேவனுடைய பிள்ளையாயிருந்தால், சோதனைகள் மற்றும், ஒழுக்கப் பயிற்சிகளின் அனுபவங்களும் அவனுக்கு கொடுக்கப்பட வேண்டியதின் அவசியத்தை தேவன் நிச்சயமாகக் கண்டிருப்பார். "**ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும் நன்மையானாலும், தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டு வருவார்**" (பிர. 12:14). ஒருவன் ஒழுக்கப்பயிற்சியையும் மற்றும் போதனைகளையும் பெற்றுக் கொள்ளாவிட்டால், அவன் பிதாவிடம் சென்று, அவனுடைய பங்கில் தடை ஏதுமில்லை என்பதை நிச்சயப்படுத்திக் கொண்டு – தனக்கு அருளப்பட்ட தேவ ராஜ்யத்தின் பங்குக்காக, தன்னை ஆயத்தம் பண்ணக் கூடிய சரியான மனநிலையில் தன்னை வைத்திருப்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். "**கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ, அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக் கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்**" (எபி. 12:6).

> "கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சிக்கிறார் (ஒழுக்கப்பயிற்சி கொடுக்கிறார்)."
> எபிரெயர் 12:6

எந்த சூழ்நிலைகளின் கீழும், நம்முடைய பரமபிதாவின் அன்பான சிட்சிக்கும் கரத்தின் கீழாக நாம் முறுமுறுக்கவோ அல்லது குறைகூறவோ கூடாது. நம் ஒவ்வொருவருக்கும் சிறந்தது எது என்பதை அவர் அறிந்திருக்கிறார். நமக்கு அளிக்கப்பட்ட பங்கு மற்றவருடையதைப் பார்க்கிலும் கடினமானதாயிருக்குமானால் நாம் குறைகூற வேண்டிய தில்லை. தனது விளையாட்டு நண்பனுடன் சேர்ந்து, தவறிழைத்ததற்காக பள்ளி முடிந்த பின்பும் அங்கு வைக்கப்பட்டிருந்த டச்சு சிறுவனைப்போல செய்யக்கூடாது. அவனுடைய பெரிய குற்றத்தைக் கண்டறிந்த ஆசிரியர், அவர்கள் வீட்டிற்குப் போவதற்கு முன்பு ஒவ்வொருவரும் தன்னுடைய பெயரை கரும்பலகையில் 100 தடவை எழுதியாக வேண்டும் என்று சொன்னார். குறிப்பிட்ட நேர முயற்சிக்குப் பிறகு, அந்த டச்சு சிறுவன் ஆசிரியரிடம், "இது சரியல்ல; அவனுடைய பெயர் ஜான் ஏக், என்னுடைய பெயர் நிக்கர் பாக்கர் வான் பாஸ்கிர்க்" என்று சொன்னான். நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற லவோதிக்கேயா காலக்கட்டத்தில் நமது கர்த்தர் சபைக்குச் சொன்னது என்னவெனில், "**நான் நேசிக்கிறவர்களெவர்களோ, அவர்களைக் கடிந்து கொண்டு சிட்சிக்கிறேன்.**" (வெளி. 3:19). நம்மில் சிலருக்கு மற்றவர் களைக் காட்டிலும் அதிக சீர்திருத்தம் அவசியப்படும். தேவன் கொடுக்கிற ஒழுக்கப் பயிற்சியின் அனுபவங்கள் மற்றும் சீர்திருத்தங்களின் அளவின் மூலமாக நாம் ஒவ்வொருவரும் நன்மையடைவோமாக. நாம் மற்றவருடைய சோதனைகள் நம்முடையதைவிட இலேசானதாயிருப்பதைக் குறித்து அதிக அக்கறை உள்ளவர்களாக இருப்போமானால், நம்முடைய கர்த்தர், "**உனக்கென்ன? நீ என்னைப் பின்பற்றி வா**" என்று சொல்லி நம்மைக் கடிந்து கொள்ள வேண்டியதிருக்கும். (யோவா. 21:22).

விசுவாச வீட்டார் உலகத்திலிருந்து வேறுபட்டவர்களாக எந்த அடிப்படையில் தேவனால் ஏற்றுக் கொள்ளப் படுகிறார்கள்? இழந்து போனதைத் திரும்ப கொடுத்தல் நடைமுறையின் கீழாக, ஆயிரவருட யுகத்தின் முடிவில் உலகத்தார் உண்மையான பூரணத்தை அடையும்போது ஏற்றுக் கொள்ளப்படுவார்கள். ஆயிர வருட யுகத்தின் முடிவில் மனுக்குலத்தார் பூரணமடைந்தவர்களாகி கிறிஸ்து ராஜ்யத்தை பிதாவானவருக்கு ஒப்படைக்கும் வரை உலகத்தாருடன் பிதாவானவர் எந்த ஈடுபாடும் கொள்ள மாட்டார்; (1 கொரி. 15:24-26). அப்பொழுது மனுஷர் ஜீவனுள்ள தேவனுடைய கரங்களுக்குள் விழுவார்கள். ஆனால் அவர்களுடைய பூரணத்தின் காரணமாக, அவர்கள் இருதயத்தில் தேவனுக்கும், அவருடைய ராஜ்யத்தின் கொள்கைகளுக்கும் உத்தமமாக இருப்பார்களானால், பூரண பாதுகாப்பில் இருப்பார்கள். ஆயிர வருட யுக அரசாட்சியில் இயேசு கிறிஸ்துவும் (உடன் சுதந்தரரான அவருடைய மணவாட்டியும்) "தேவனுக்கும் மனுஷருக்கு மிடையே மத்தியஸ்தராக" இருப்பார்கள். மனுக்குலத்தார் தேவனிடம் தொடர்பு கொள்ளுவதும், உறவு கொள்ளுவதும் மேசியாவின் மூலமாகத்தான் அவரிடம் வரவேண்டும், அத்துடன் மனுக்குலத்தாருடனான தேவனுடைய நடவடிக்கை மற்றும் உறவு கொள்ளுதல் எல்லாம் மேசியாவிலும், அவர் மூலமாகவும் இருக்கும்.

இந்த விரிவாக்கப்பட்ட சுவிசேஷ யுக அறுவடையின் போது, "**ஆபிரகாமின் சந்ததியும், வாக்குத்தத்தத்தின்படியே உடன் சுதந்தரருமான**" பிரதிஷ்டை செய்தவர்களுடனான தேவனுடைய நடவடிக்கை உலகத்தாருடனான நடவடிக்கையி லிருந்து எவ்வளவு வேறுபட்டதாக இருக்கும். "**என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால், அவன் என்னிடத்தில் வரமாட்டான்**" என்றும், "**என்னிடத்தில் வருகிற வனை** (பிதாவால் இழுத்துக்கொள்ளப்பட்டு) **நான் புறம்பே தள்ளுவதில்லை**" (புறக்கணிப்பதில்லை) (யோவா. 6:44,37) என்றும் இயேசுவானவர் அறிவித்ததுபோல, இவர்கள் பிதாவால் "**இழுத்துக் கொள்ளப்பட்டவர்கள்**." நம்முடைய கர்த்தரைப் பின்பற்றுகிறவர்களில் சிலர், அவர் கல்வாரியில் பாவங்களுக்கான பலியை நிறைவேற்றி முடிப்பதற்கு முன்பாக பிதாவினால் அவரிடமாக இழுத்துக் கொள்ளப் பட்டார்கள், மற்றவர்களோ, சுவிசேஷயுகம் முழுவதுமாக இழுத்துக் கொள்ளப்பட்டார்கள்; இதையே அப்போஸ்தலன், "**வாக்குத்தத்தமானது... நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது**" (அப். 2:39) என்று அறிவிக்கிறார். கர்த்தர் பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளயக்காரர்களில் போதுமானவர்களை ஆயிர வருட யுக ராஜ்ய வேலைக்கு ஆயத்தஞ்செய்யும்வரை, வாலிபரான பாத்திரவான்களைப் போலவே, பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளயக்காரர்களுக்கும் மீட்கும் பொருள் இரத்தத்தின் புண்ணியத்தினால் தற்காலிகமாக உத்தரவாத மளிப்பது மிகப் பெரிய சிலாக்கியமாயிருக்கிறது. சுவிசேஷ யுக சபையார் ஆபிரகாமின் உடன்படிக்கை ஏற்பாட்டின்கீழ் பிதாவினால் குமாரனிடமாக இழுக்கப்பட்டு, அவரிடம் கொடுக்கப்பட்டார்கள். (யோவா. 17:6,12).

இழந்து போனதைத் திரும்ப கொடுக்கப்படும் வகுப்பா ராகிய உலகத்தார் அடுத்த யுகத்தில் பிதாவினால் இழுத்துக் கொள்ளப்பட மாட்டார்கள், ஆனால் கர்த்தராகிய இயேசு தம்மிடத்தில் அவர்களை இழுத்துக் கொள்வார். "**நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்வேன்**" (யோவா. 12:32). மேலும் குமாரன் அவர்களை அவரிடமாக இழுத்துக் கொண்ட பிறகும்கூட, மத்தியஸ்தர் என்ற வகையில் அவர், அவர்க ளுக்குப் போதித்து, அவர்களுக்கு ஒழுக்கப்பயிற்சி அளித்து, அவர்களுடைய முழங்கால்களை முடங்கச் செய்து, அவர்களுடைய நாவுகள் அறிக்கை செய்யும்படி அவர் களுக்கு அவசியமான பாடங்களைக் கற்பித்து, இழந்து போன எல்லாவற்றையும் அவர்களிடம் மீண்டும் கொண்டு வந்து சேர்க்கும் வரைக்கும், அதுவும் பிதாவானவர் அவர்கள் சம்பந்தமாக - ஆயிர வருட யுகத்தின் முடிவில் ஏதாவது செய்வதற்கு முன்பாக அவர்களைத் தம்மிடத்தில் காத்துக் கொள்ள வேண்டும்.

கிறிஸ்துவின் பாடசாலைக்குள் பிரவேசிக்க வேண் டியதும் எல்லோருக்கும் அவசியமாயிருக்கிறது, இந்த பாடசாலையில் நம்முடைய கர்த்தரை உண்மையாய்ப் பின்பற்றுகிறவர்கள் உலகத்தின் ஆவியை முழுமையாக ஜெயங்கொள்ளுவதற்கு நேராக முன்னேறிச் செல்வார்கள் இந்த முன்னேற்றம் விசுவாசத்தாலும், எஜமானரின் உபதேசமும் பயிற்சியும், அவருடைய வழிநடத்துதல் மற்றும் போதனையின் கீழாக அவர்களை தொடர்ந்து மிகுந்த ஆவலும், ஜாக்கிரதையுமுள்ள மாணாக்கர்களாக காத்துக் கொள்ளும் என்ற உறுதியான முழுமையான நம்பிக்கை யாலும் மட்டுமே அடைந்து கொள்ள முடியும். "**நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்**" (1 யோவா. 5:4). அதாவது ஜெயங்கொள்ளுகிறவனாகவும் தேவனுடைய வார்த்தையின் விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை உடையவர்களில் ஒருவனாயிருப்பது என்னவென்பதற்கு இது உண்மையான ஆலோசனையாக இருக்கிறது. இது எளிமையானதுதான்; நாள்தோறும், தவறா வரமுடைய நம்முடைய போதகரும் வழிகாட்டியுமானவருக்கு மிகக் கவனமாக செவிகொடுத்து, அனுதின சிலுவை எவ்வளவு பாரமாயிருந்தாலும் அல்லது ஒழுக்கப்பயிற்சிகள் எவ்வளவு கடினமாயிருந்தாலும் பொருட்படுத்தாமல் அவருடைய ஞானத்திலும் அன்பிலும் முழுமையான, நிச்சயமான விசுவாசத்துடனும், பொறுமையுடனும் அவருடைய போதனைகளை நிறைவேற்ற வேண்டும். இந்த நடைமுறை, மெய்யாகவே சலிப்பூட்டுகிறதாக வாழ்நாள் முழுவதும் இருக்கிறது; ஆனால் முடிவோ மகிமையானதாயிருக்கும்! அனுதின ஒழுக்கப் பயிற்சிகூட, பொறுமையோடும், சாந்தத் தோடும் ஏற்றுக் கொள்ளப்படுமானால், ஜெயங்கொள்ளுகிற மகாபெரிய வேலையில் உணர்வு பூர்வமான முன்னேற்றத் தையும், முதிர்ந்த கிறிஸ்தவ குணலட்சணத்தின் இலக்கிற்கு நெருங்கிச் சேர்வதையும் நிகழ்கால வெகுமதியாகக் கொண்டுவரும். (ரோம. 8:29; கொலோ. 3:14; யாக். 1:4; 5:10,11).




பாவங்களுக்கான மன்னிப்பையும், சில சமயங்களில் பாவங்கள் மன்னிக்கப்பட்ட பின்பு தொடர்ந்து வருகிற சாட்டையடிகளையும் பற்றிய, பல்வேறு தப்பறையான கருத்துக்களுக்கு இடமளிக்கப்படுகின்றன. தாவீது ராஜா வின் அனுபவங்கள் இந்த பாடத்தின் மீதான சத்தியத்தை விளக்கிக் காட்டுகின்றன. அவன் பாவஞ் செய்த பின்பு, அவன் உண்மைகளை - அது எவ்வளவு பெரிதான குற்றம் என்ற சரியான மதிப்பை உணர்ந்து கொண்டதாக காணப்பட்ட ஒரு காலப்பகுதி இருந்தது. பின்பு கர்த்தருக்கு முன்பாக பாவத்தை ஒத்துக் கொண்டு, கர்த்தருக்கு முன்பாக மீறுதலை அறிக்கை செய்யும்படி நிர்பந்திக்கிற விழிப்பு ணர்வும், சுய வெறுப்பும், நொறுங்குண்ட இருதயமும், மனத்தாழ்மையும் முழுமையாக வந்தது. பின்பு ஏற்ற சமயத்தில் தேவனுடைய மன்னிப்பு கிடைத்தது, படிப்படியாக தாவீது, தான் மன்னிக்கப்பட்டிருப்பதையும், அதன் பலனாக வாழ்வின் அனுபவங்களில் சந்தோஷங்கள் திரும்பக் கொடுக்கப்பட்டிருக்கும் உண்மையையும் உணர்ந்து பாராட்டி மதிப்பீடு செய்தார். இருந்தபோதிலும், அதன் முடிவு இன்னும் ஏற்படவில்லை என்று நாம் காண்கிறோம்; அநேக ஆண்டுகளுக்குப் பிறகு, தேவன் தாவீதின் மீதும், அவனுடைய குடும்பத்தின் மீதும் மிகக் கடுமையான, பாரமான ஒழுக்கப் பயிற்சியை அனுமதித்தார். அது ஒரு பிரதிபலனான தண்டனையாகத் தோன்றியது. (2 சாமு. 12:10-12). தன் தகப்பனுக்கு எதிரான அப்சலோமின் கலகமும், அதன் பங்காகப் பின் தொடர்ந்து வந்த தீய அனுபவங்கள் எல்லாவற்றின் தொடர்ச்சியும் மன்னிக்கப் பட்டிருந்த தன்னுடைய மீறுதலின் காரணமாக தேவனால் அனுமதிக்கப்பட்ட ஒரு சிட்சையாக தாவீதால் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

தேவனுக்கு அருமையான ஜனங்களில், எல்லோருக்-கும், தாவீதுக்கு அவசியமாயிருந்த அப்படிப்பட்ட கடுமை யான ஒழுக்கப்பயிற்சி தேவைப்படாதது பாக்கியமாகும். இருப்பினும், யாரேனும் மிகக் கொடிய பாவத்தில் அகப்பட்டிருந்தாலும்கூட, தேவனிடம் இன்னும் அதிகமான இரக்கம் இருக்கிறது. அதை நாடிப் பெறவேண்டும் என்ற

ஆறுதலான எண்ணம் எல்லாருக்காகவும் வைக்கப்பட்டிருக் கிறது. ஆனால் இன்னும் அதிகமாக, கர்த்தருடைய குணாம் சத்தைப் பெற்றிருக்கிற பிள்ளைகளுக்கான ஆசீர்வாதங்கள் இருக்கின்றன, அதனிமித்தம் அவர்கள் தங்கள் இருதயங் களிலிருந்து "**என் தேவனே உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன், உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது**" (சங். 40:8) என்று சொல்ல முடியும். இவர்-களுக்கும்கூட பாடங்கள், சிட்சைகள், தேவைப்படுகின்றன. ஏனென்றால், நம்முடைய அருமை மீட்பரும்கூட "**பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டார்**" (எபி. 5:8) - அவர் தம்மை மகிமை, கனம் மற்றும் சாவாமைக்கு எழுப்பியவரான (எபே. 1:20-22) பிதாவின் மதிப்பீட்டில் கீழ்ப்படிதலுக்கு இருந்த மதிப்பையும் கற்றுக் கொண்டதால், அவர் அதற்காக கொடுக்க வேண்டிய கிரயத்தையும் கற்றுக் கொண்டார். அதைப் போலவே அவரைப் பின்பற்றுகிற-வர்கள் எல்லோரும் அவருடைய பள்ளியில் கற்றுக்கொள்ள வேண்டும். பிதாவானவர் ஏற்றுக் கொள்ளப் போகிற ஒவ்வொருவரும், "**நல்ல மேய்ப்பரின்**" பதிலாளாக இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். (யோவா. 10:14; எபி. 13:20; 1 பேது. 5:4). ஒவ்வொருவரும் அனுபவத்தின் மூலமாக பிதாவின் புன்னகையையும் மற்றும் ஐக்கியத்தையும் மற்றும் தற்காலத்துக்கும், நித்திய ஜீவனுக்குமான கிருபை நிறைந்த வாக்குத்தத்தங்களையும் மதிப்பிட கற்றுக்கொள்ள வேண்டும்.

இது எப்படி புரிந்துகொள்ளப்படவேண்டும்? ஒரு பாவமானது மன்னிக்கப்பட்டிருந்தாலும், அதன் காரணமாக எப்படி தண்டனை அளிக்கப்படும்? பாவத்திற்கும், பாவிக்கும் எதிரான தம்முடைய கடுங்கோபத்தை தேவன் விட்டுவிட்டதை அல்லது கைவிட்டதையும், தயவின் நோக்கிலிருந்து பாவியுடன் நடவடிக்கை செய்வதையும் தெய்வீக மன்னிப்பு குறித்துக்காட்டுகிறது என்பதே இந்த கேள்வியின் மீதான சரியான கருத்தாகும். ஆயினும் நீதியானது ஒரு பிடியை இப்போதும் வைத்திருக்கிறது, அது திருப்திப்படுத்தப்பட வேண்டும். நீதி எந்த மன்னிப்பையும் அறியாது. அதற்கு முழுமையாக ஈடுகொடுக்கப்பட வேண்டும், முதலாவது நீதி, பின்பு அன்பு! தேவனுடைய பிரதிஷ்டை செய்த பிள்ளை "**நன்றாகச் செய்தாய், உண்மையும் உத்தமுமான ஊழியக் காரனே**" என்ற தேவனுடைய பாராட்டை அவனுக்கு கொண்டு வருகிற அவருடைய ஒழுக்கப்பயிற்சிகளையும் போதனை களையும், அனுபவங்களையும் விரும்பி ஏற்றுக் கொள்வானாக. ***




# தெய்வீக ஜீவிகளின் பரலோக ஸ்தானத்தை புரிந்து கொள்ள உதவும் ஒரு பாடம்

A Study help in understanding the Heavenly Position of the Divine beings

ஒரு ஆத்துமாவோ, அல்லது ஜீவியோ ஒரு சாதாரண சரீரத்தைக் காட்டிலும் மேலானதாக இருந்தாலும், ஒரு சரீரம் இல்லாமல் ஜீவியாகவும், ஜீவித்திருக்கவும், ஆத்துமா வாகவும் இருக்க முடியாது. ஆயினும் வெவ்வேறு வகை களான சரீரங்கள் இருக்கின்றன; அதாவது "**ஜென்ம** (மாம்ச ஜீவன்) **சரீரமுமுண்டு, ஆவிக்குரிய சரீரமுமுண்டு**" (1 கொரி. 15:44) ஜீவி அல்லது ஆத்துமாவின் இயல்பை சரீரத்தின் வகை தீர்மானிக்கிறது. ஆவிக்குரிய சரீரத்தில் இருக்கும் ஜீவிகள் ஆவி ஜீவிகள் அல்லது வானத்துக்குரிய ஜீவிகளாக இருக்கின்றார்கள்; மேலும் ஆவி ஜீவிகள் மத்தியில் ஒரு கூடுதலான வேறுபாடு காணப்படுகிறது அது தன்னில்தானே ஜீவனோடிருத்தல் அல்லது சாவாமையை உடையவர்களாயிருத்தல் (1 தீமோ. 6:16; யோவா. 5:26; 1 கொரி. 15:53). "**தெய்வீக சுபாவத்தில்**" (2 பேது. 1:4) இருக்கும் தேவனும், இயேசுவும், மகிமையடைந்த சபையும் இவ்வண்ணமாகவே இருக்கிறார்கள், இவர்கள் தேவ தூதர்கள் போன்றவர்களை (ஆவி ஜீவிகளை) விட மேலான வர்கள். (எபே. 1:20,21; எபி. 1:4). "**பூமியிலிருந்துண்டான மண்ணான**" (1 கொரி. 15:47) மாம்ச சரீரத்தில் மிக உயர்ந்த தரவகையான ஜீவிகள், மானிட ஜீவிகள் அல்லது மானிட ஆத்துமாக்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். எல்லா பூமிக்குரிய அல்லது மாம்ச ஜீவிகள் அல்லது ஆத்துமாக் களை விட மனிதன் மிக மேலானவனாக இருக்கிறபடியால், கீழான பிராணிகளின் ஆத்துமாக்களை விட மனுஷ ஆத்துமா மேலானதாயிருக்கிறது. (எண். 31:28). ஆதியில் தேவனுடைய சாயல் மற்றும் ரூபத்தில், அவருடைய பிரதிநிதியாக இருந்த ஆதாம் பூமியின் ராஜாவாக இருந்தான் (சங். 8:5,6).

மனுக்குலமானது நிச்சயமாகவே வானத்துக்குரிய அல்லது ஆவிக்குரிய இனமாயிராமல் ஒரு மாம்சத்துக்குரிய, பூமிக்குரிய இனமாயிருக்கிறபடியாலும், "**ஆகிலும் ஆவிக்குரிய சரீரம் முந்தினதல்ல, ஜென்ம சரீரமே** (மாம்ச ஜீவன், மாம்சத்துக் குரிய) **முந்தினது**"**....முந்தின மனுஷன் பூமியிலிருந்துண்டான மண்ணானவன்**" (1 கொரி. 15:46,47) என்று இந்த


| முதலாம் மனுஷன் பூமியிலிருந்துண்டான மண்ணானவன் | இரண்டாம் மனுஷன் வானத்திலிருந்து வந்தவர் |
|---|---|
| 1 கொரிந்தியர் 15:47 | |

உண்மையை ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலர் நமக்கு நிச்சயப்படுத்துகிறார். எனவே ஒரு மாற்றத்தை உண்டுபண்ணும் கிரியை ஏதாவது நடைபெறாவிட்டால், உயிர்த்தெழுதலில் [anastasis, மறுபடியும் எழுந்திருத்தல்," "முன்பிருந்த நிலைக்கு கொண்டு வருதல்" restoring"] வாக்குத்தத்தமானது ஆதாமுக்கு (மேலும் அவனுடைய குடும்பத்துக்கும்) செயல்படுத்தப்படும்போது அவன் ஜீவியா யிருப்பதையும் (ஆத்துமா), அவனுடைய பாவம் மற்றும் வீழ்ச்சிக்கு முன்பு அவன் பெற்றிருந்த அதன் ஆதி அதிகாரங் களுக்கு கொண்டு வருதலையும் அது அர்த்தப்படுத்தும் என்றும் நாம் தீர்மானிக்க முடியும் - அவன் தன்னுடைய சிருஷ்டிகரின் பூமிக்குரிய சாயலில் இருந்த போது, அவன் செம்மையானவனாக இருந்தான் (ஆதி. 1:27; பிர. 7:29). 'அனஸ்தசிஸ்' என்ற வார்த்தை, வீழ்ச்சியிலிருந்து செம்மை யானதிற்கும் அல்லது ஒரு அபூரணமான நிலைமை யிலிருந்து ஒரு பூரணமான நிலைமைக்கு "**எழுந்திருத் தலையும்**," "**திரும்ப கொண்டு வருதலையும்**" மட்டுமே சுட்டிக்காட்டுவதாலும், மேலும் அந்த வார்த்தை, மானிட ஆத்துமா, அல்லது மானிட ஜீவிக்கு பொருந்துவதாலும், நிச்சயமாகவே ஆதாமுக்குள் வீழ்ச்சியடைந்த மனுக் குலத்தின் இயல்பில் ஒரு மாற்றமும் நிகழாமல், எழுந்திருத் தலானது, ஆதாமால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டதும், அவனால் இழந்ததுமான பூரணத்தின் தரத்தையும், தெய்வீக ரூபத்தையும் அடைதலை கொஞ்சமும் கூட்டிக் குறைக்காமல் சுட்டிக்காட்டுகிறது. ஆதாமுக்குள் அவர்கள் சிருஷ்டிக்கப்பட்ட தெய்வீக சாயலில் இருந்து மிகவும் கீழாக வீழ்ச்சியடைந்திருக்கிறார்கள் என்பதை விட தகப்பனாகிய ஆதாமைப் போல, எல்லாரும் பூமியிலிருந்து உண்டான, மண்ணானவர்களாயிருக்கிறார்கள் அதாவது மானிட சுபாவத்தை கொண்டிருக்கிறார்கள் என்பது பெருந்திரள் கூட்டமான இந்த மனுக்குலத்தைப் பொறுத்தவரை உண்மையாயிருக்கிறது. ஆனால் நாம் பார்க்க இருக்கிறபடி இது எல்லாருக்கும் உண்மையானதல்ல.

தேவன் ஒரு விசேஷித்த ஜனத்தை "சிறுமந்தையை" (லூக். 12:32; 6:23) அவர்களுடைய மீட்பரும் கர்த்தருமாகிய கிறிஸ்துவுடன் ஆயிர வருட யுக ராஜ்யத்தில் உடன் சுதந்தரராய் பூமியின் எல்லா வம்சங்களையும் ஆசீர்-வதிக்கும்படிக்கு சுவிசேஷ யுக காலத்தில் தெரிந்தெடுத்துக் கொண்டிருக்கிறார் என்பதை வேத வாக்கியங்கள் தெளிவாக விளக்குகின்றன. மேலும் இந்த "மணவாட்டி" வகுப்பாராய் இருப்பவர்கள், அவர்களுடைய உயிர்த்தெழுதலில், ஒரு புதிய சுபாவமாகிய தெய்வீக சுபாவத்திற்கு மாற்றப்பட்டு அதன் பின்பு, அவர்களுடைய கர்த்தருடன், அவரைப் போலிருந்து, அவர் இருக்கிறவண்ணமாகவே அவரை தரிசிப்பார்கள் என்பதை அவைகள் மிகத் தெளிவாக நிச்சயிக்கின்றன. (1 யோவா. 3:2; யோவா. 14:3; 17:24; 2 பேது. 1:4).

அவர்களுடைய உயிர்த்தெழுதலில் அப்படிப்பட்ட ஒரு மாற்றத்தை (அந்த ஆவிக்குரிய ராஜ்யத்தின் எல்லா அங்கத்தினர்களுக்கும் அவசியமானது) பெற்றுக்கொள்ள, அவர்களுடைய மரணத்திற்கு முன்பாக ஒரு குறிப்பிட்ட மாற்றம் அவர்களிடத்தில் நிகழ வேண்டியுள்ளது. இந்த மாற்றமானது வேதாகமம் குறிப்பிடுகிற ஆவியினால் ஜெனிப்பிக்கப்படுதலிலிருந்து ஆரம்பித்து உயிர்த்தெழும் நேரத்தில் நிகழும் (கொலோ. 1:18) ஆவியினால் பிறத்தலில் முடிவடைகிறது என்பதையும் வேதவாக்கியங்கள் நமக்கு நிச்சயப்படுத்துகின்றன. ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டு ஆவியினால் பிறந்தவர்கள் ஆவி ஜீவியாகயிருப்பார்கள், இனி ஒருபோதும் அவர்கள் மானிட ஜீவியாக இருக்கமாட்டார்கள். மாம்சத்தினால் ஜெனிப்பிக்கப்பட்டு மாம்சத்தினால் பிறப்பது எப்படி மாம்சமாயிருக்கிறதோ, அப்படியே ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டு ஆவியினால் பிறப்பதும் ஆவியாயிருக்கும். நிக்கொதேமுவும், பொதுவாக யூதர்களும், ஏற்ற காலம் வரும் போது அவர்களுடைய தேசமானது தேவனுடைய ராஜ்யமாக மாறும், அதாவது ஒரு மாம்சமான மேசியாவின் கீழ் ஒரு மாம்சத்துக்குரிய ராஜ்யமாக மாறும் என்று எண்ணினார்கள். ஆனால் நம்முடைய கர்த்தர் அவனுடைய தவறை திருத்தி, பரலோக ராஜ்யமாகிய அந்த ராஜ்யத்தின் அங்கத்தினராக ஆகிறவர்கள், தேவனுடைய ஆவியினால் ஜெனிப் பிக்கப்பட்டு மறுபடியும் (இரண்டாவது முறை) பிறக்க வேண்டும் (யோவா. 3:3-7) என்று அவனுக்கு நிச்சயப்படுத்தினார்.

மீட்பரின் மீதுள்ள விசுவாசத்தால் ஏற்கெனவே நீதிமானாக்கப்பட்டிருக்கிற விசுவாசிகள் மட்டுமே இந்த புதிய சுபாவத்துக்குள்ளாக ஜெனிப்பிக்கப்படுகிற நிலைக்கு வருகிறார்கள் என்றும், விசுவாசிகள் ஒவ்வொருவருக்கும்



நீதிமானாகுதல் கிறிஸ்துவின் மூலமாக ஒரு இலவச வெகுமதியாக வருகிறபோதும், இந்த "**தெய்வீக சுபாவமாகிய,**" புதிய சுபாவத்துக்கென்று ஜெனிப்பிக்கப்படுதலானது பிதாவினிடத்தில் செய்யும் முழுமையான பிரதிஷ்டையின் பலனாக, அவரிடத்தில் இருந்து நேரடியாக வருகிறது என்று அப்போஸ்தலர் விளக்குகிறார். தேவ கிருபையின் வார்த்தையாகிய சத்தியமானது, "**தேவன் அழைத்த பரம அழைப்பில்**" (பிலி. 3:14) பயன்படுத்தப்பட்டபடியே, ஜெனிப்பிக்கப்படுதலுக்கும் உயிர்ப்பிக்கப்படுதலுக்குமான வல்லமையாக இருக்கிறது. அதன்மூலம் புதிய பிரதிஷ்டையின் ஜீவனை, அதை சரியாக அப்பியாசிக்கிற எல்லாரிடத்திலும் துவக்குகிறது. "**நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. அவர் நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்**" (1 பேது. 1:3,4) என்று அப்போஸ்தலர் கூறுகிறார்.

மாம்சமும் இரத்தமும் (மானிட சுபாவமான ஆத்துமாக்கள் அல்லது ஜீவிகள்) சுதந்தரிக்க முடியாத, (1 கொரி. 15:50; யோவா. 3:5) வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்வதற்காக, "***சரீரமான சபையாகிய***" (எபே. 1:22,23) சிறுமந்தையை ஜெனிப்பித்து, உயிர்ப்பித்து ஆயத்தப்படுத்தும் வேலைக்காக, முக்கியமாக சுவிசேஷ யுகம் ஒதுக்கி வைக்கப்பட்டது. சபையின் உயிர்த்தெழுதல் கிறிஸ்து இயேசுவின் உயிர்த்தெழுதலையும் உள்ளடக்கியிருக்கிறது, அவரே சபையின் தலையாக இருக்கிறார், சபை சரீரமாக இருக்கிறது. மனிதர் மற்றும் தூதர்களின் சுபாவத்திற்கு மிக மேலானதும், மகிமை மற்றும் வல்லமையின் உச்ச நிலையாகிய, தெய்வீக சுபாவத்திற்கு, பெரிதும், மிகவும் ஆச்சரியமான முறையில் 'எழுப்பப்படுகிறார்கள்' என்ற கருத்தில், பிரதானமான அல்லது முதலாவது உயிர்த்தெழுதலாக மட்டுமே இந்த உயிர்த்தெழுதல் இல்லாமல், முதலாவது ஒழுங்காகவும் இருக்கிறது. இந்த முதலாவது (பிரதானமான) உயிர்த்தெழுதலானது 1900 வருடங்களுக்கு முன்பு சபையின் தலையானவர், யோர்தானில் ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டு, அவருடைய உயிர்த்தெழுதலின் நேரத்தில் ஆவியினால் பிறந்தபோது தொடங்கியது – "மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்"; "மரித்தோரிலிருந்தெழுந்து நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்" (கொலோ. 1:18; 1 கொரி. 15:20). அது முதல், சுவிசேஷ யுகம் முழுவதும், ஒருவர் பின் ஒருவராக அவருடைய "சிறுமந்தையானது" ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டு, உயிர்ப்பிக்கப்பட்டு (எபே. 2:1,5; கொலோ. 2:13), ஆவியினால் பிறப்பதற்கு முன்னேற்பாடாக அபிவிருத்தியடையச் செய்யப்பட்டார்கள். ஆவியினால் பிறக்கிறவர்கள் கண்ணுக்கு புலப்படாதவர்களாக இருக்கிறார்கள், காற்றைப் போல ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு அவர்களால் போய்வர முடியும் (யோவா. 3:8). இந்த ஜீவியத்தில் ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டு, உயிர்த்தெழுதலில், ராஜ்யத்தின் பரலோக பகுதிக்குள்ளாக ஆவியினால் பிறக்கிறவர்களில் இரண்டு வகுப்பார் இருக்கிறார்கள். பிரதானமாகவும், முதலாவதாகவுமாக ஆவிக்குரிய சுபாவத்தில் உயர்வான தெய்வீக சுபாவம் கொடுக்கப்பட்ட, "சிறுமந்தையாகிய," 144,000 பேர்களான கிறிஸ்துவின் மணவாட்டி வகுப்பார்; இரண்டாவதாக, ஒரு பெரிய, எண்ணிலடங்காதவர்களான வகுப்பார். (வெளி. 7:9-17). இவர்கள் "(மணவாட்டியின்) பின்னாலே செல்லும் அவளுடைய தோழிகளாகிய கன்னிகைகளான" (சங். 45:14), "திரள் கூட்டம்." இவர்களுக்கும் ஆவிக்குரிய சுபாவம் கொடுக்கப்படும், ஆனால் அது தெய்வீக சுபாவத்திற்கு சற்று தாழ்வான நிலையிலாகும். ***




Visit us at : **www.biblestandardindia.com**

**For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact:**

**Bro. V. Vincent Jeyakumar**
**[Representative of India]**

**Laymen's Home Missionary Movement**

#11/119-3, Near Water tank, South Street, Mukuperi - 628 616
(Near Nazareth), Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincent.v31@gmail.com
Cell : 98949 26629

**FOR PRIVATE CIRCULATION ONLY**